கொலம்பியா புதிய ரிகார்டுகள்



நீலம்மா கடம்பி

GE. 6199

பிபரே நாமரஸம்
ஜானகி மனோஹரம்

கொத்தமங்கலம் சீனு


GE. 6200

சிவந்த பாதத்தை
(2 பாகங்கள்)



ஸரஸ்வதி ஸ்டோர்ஸ். மவுண்ட் ரோட், மதராஸ்.

முகமத் இப்ராஹீம் & கம்பெனி, சென்னை. S. கண்ணன் & கம்பெனி, திருச்சிராப்பள்ளி. வேங்கடேச் டிரேடிங் கம்பெனி, மதுரை. V. S. ராஜகோபாலன் & கம்பெனி, மதராஸ், பங்களூர், கோயமுத்தூர், சேலம். சௌத் இந்தியா [illegible] எம்போரியம், சென்னை. M. A. இருதயசாமி & கம்பெனி, [illegible].



நீங்கள் சாப்பிடும் ஒவ்வொரு பதார்த்தமும் ஊக்கம் அளிக்கின்றனவா?





ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்க வேண்டும். டால்டா "குக்-புக்" (ஆங்கிலத்தில் மட்டும்) உணவுப்பொருள்களின் தராதரத்தைப் பற்றியும், 150 ருசிய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. Dept. D133 P.O. Box No. 353 Bombay என்ற விலாசத்திற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்



ஆம்; அளிக்கின்றன. உணவு ஊக்கமளிக்கிறது! ஆனால் எல்லா உணவும் வேண்டிய அளவிற்கு ஊக்கமளிப்பதில்லை. சில அதிகமும், சில குறைவாகவும் அளிக்கின்றன. இங்குதான் ஆரோக்கியத்திற்கு அபாயமிருக்கிறது. நமக்குப் பிரியமான சில உணவுகளில் ஊக்கமளிக்கக்கூடிய சக்தி குறைவாக இருப்பதால் இவ்வுணவுகளிலிருந்து ஊக்கத்தை எதிர்பார்க்கும் ஜனங்கள் விளையாட்டிலோ, வேலையிலோ வெகு சீக்கிரம் களைப்படைகிறார்கள். எல்லா உணவுகளையும் அதிக சக்தி கொடுக்கக் கூடியவைகளாக செய்யலாம்—வைடமின் நிறைந்த டால்டாவினால் சமையல் செய்வதால் இயற்கை தரக்கூடிய சக்திப் பொருளையும் அநேக உணவுகளிலில்லாத சத்துக்களையும் டால்டா தருகிறது. நீங்கள் சாப்பிடும் உணவுகளுக்கு அதிக ஊக்கத்தையும் கொடுக்கிறது.

வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

கல்கி
பொருளடக்கம்

மலர் 4 }
இதழ் 31 }

1945 மார்ச் 11

{ தாரண ௵
{ மாசி 28

"கல்கி"யில் வெளிவரும் கதைகளின் கதா பாத்திரங்களும், சம்பவங்களும் கற்பனையே.

இந்த வார கல்கி அட்டைப் படத்தைப் பாருங்கள். இந்தக் கூட்டத்தில் நிற்கும் ஒவ்வொருவரையும் கூர்ந்து கவனித்துப் பாருங்கள். ஆஹா, தென்னிந்திய ரயில்வே அதிகாரிகளே! உங்களைத்தான் சொல்கிறோம். இந்தக் கூட்டத்தில் நிற்கும் எல்லாரையும் கவனித்து வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் லட்சக் கணக்கில் பணத்தைச் செலவழித்து, விதவிதமான விளம்பரங்கள் அடித்து, பத்திரிகைகளிலெல்லாம் அறிக்கைகள் விடுத்து, பத்திரிகைக்காரர்களையெல்லாம் கூப்பிட்டு அனுப்பி, "ரயிலில் இடம் கிடையாது. மகா மகத்துக்குப் போகாதே! ரயிலில் இடம் கிடையாது. மகா மகத்துக்குப் போகாதே!" என்று கதறியும் கத்தியும் உங்கள் வேண்டுகோளையெல்லாம் மீறி, ரயில் ஏறி, மகா மகத்துக்குச் சென்று லட்சக்கணக்கான குற்றவாளிகளில் ஒரு பகுதியை ரயில்வேக்காரர்களே, இதோ உங்களுக்காகப் பிடித்து வைத்துவிட்டோம். நன்றாகப் பார்த்து வைத்துக் கொள்ளுங்கள்.

தமிழ் நாட்டில் 'சாமியும் இல்லை; பூதமும் இல்லை' என்று பிரசாரம் செய்பவர்களையும் சுயமரியாதைக்காரர்களையும் இந்தக் கூட்டத்தைப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அவர்களுடைய இருபது வருஷத்து இடைவிடாத பிரசாரத்தின் பலன் இதுதான் என்றும், 'கோவில்—குளம் வேண்டாம்; பண்டிகை - திருவிழா வேண்டாம்' என்றெல்லாம் இந்த நாட்டில் பிரசாரம் செய்வதில் ஏதேனும் பயன் உண்டா என்று சிந்திக்க வேண்டுகிறோம்.

—போட்டோ: சுப்பர்.

★



★



சந்தேகமின்றியும் நீ துணிச்சலாய் இருக்கிறாய். அப்படி இல்லாவிட்டால் தான் நீ ஒரு அதிசயமான பிறவியாய் இருப்பாய். ஆனால் வீரமுள்ள இந்திய பிறவி என்ன செய்யக்கூடும் என்று நீ கேட்கலாம். விடை மிக எளிது. அவன் இ. ஏ. எப்பில் சேருகிறான். இந்த மேன்மையான சேவையில் அவனுடைய பலமு திறமையை காண்பிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டு. மேலும் படிப்பையும் [illegible] அந்தியோசம் போட்டு வருவான். பிற்கால வெற்றிக்கு, விவேகமுள்ளவர்களின் அபிப்பிராயம், திறமை, [illegible] ஸ்தானம் என்பவை முக்கியமான தேவைகள். யுத்த பிற்கால இந்தியாவிற்கு உங்களை இ. ஏ. எப். [illegible] வேண்டும்.

உங்களுடைய பிற்கால வாழ்க்கையைப் பற்றி நினைப்பதற்கு இதுவே சமயம்!

* இந்திய ஆகாயப் படையில் அடையும் பயிற்சியும் அனுபவமும் அனேகருக்கு லாபகரமான சிவில் வாழ்க்கை நடத்த தேவையான யோக்யதாம்சங்களை கொடுக்கிறது என்பதற்கு சந்தேகமேயில்லை.
* யுத்தம் நடக்கும் வரை தங்கள் ஆதிக்கத்திலுள்ள அநேக வேலைகளை காலியாக வைத்திருப்பதாக சர்க்கார் வாக்களித்திருக்கின்றனர். இந்த வேலைகள் இப்பொழுது யுத்தசேவை செய்தவர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.
* யுத்த சேவையிலிருந்தவர்களின் தேர்ச்சி பெற்றவர்களுக்கு குறிப்பிட்ட வியாபாரம் அல்லது தொழில் சர்க்கார் செலவில் மேற்கொண்டு பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் தயாராகி வருகிறது.
* சர்வகலாசாலைகளில் படிப்பதற்கு [illegible] மாணவர்களுக்கு யுத்த சேவைகள் [illegible] உள்ள சலுகைகளை அடைவார்கள். [illegible] மேற்கொண்டு படிக்கலாம். [illegible] பெறலாம்.

இந்த கூப்பனை கத்தரித்து அதை உங்களுக்கு சமீபத்திலுள்ள G. D. (வைமானிகர்) சேர்த்துக் கொள்ளும் ஆபீசருக்கு அனுப்புங்கள். அவர் உங்களுக்கு விண்ணப்ப பாரமும் இந்திய ஆகாயப் படையில் யுத்த சேவைக்கான விவரங்களையும் பிரசுரங்களையும் அனுப்புவார்.

பெயர் __________

விலாசம் __________

இ. ஏ. எப்க்குத் தேவையானது

கல்வி [illegible] 17½ முதல் 26 வயதுக்குள் இருக்கும் [illegible] ஆண்கள் [illegible] பேசவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும்.

கத்தரித்து கூப்பனை
சமீபத்திலுள்ள G. D. R. Oக்கு அனுப்புங்கள்

I. A. F. C. D. (வைமானிக) சேர்க்கும் ஆபீசர்
புதுப்பேட்டை [illegible], மதராஸ்
I. A. F. C. D. (வைமானிக) சேர்க்கும் ஆபீசர்
கப்பன் ரோடு, பெங்களூர்.

AAA—1531—TM

கல்கி

மலர் 4 } தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் { இதழ் 30

என்ன சேதி?

உதவி செய்யுங்கள்

நீண்ட கால சிறைவாசத்துக்கு உட்பட்ட அரசியல்' கைதிகளுடைய குடும்பங்களுக்கு உதவி செய்ய வேண்டியதன் அவசியத்தைப் பற்றி முன்னமே எழுதியிருக்கிறோம். இது விஷயமாக, தினசரிப் பத்திரிகைகளில் "பாரத தேவி" ஆசிரியர் ஸ்ரீ என். ராமரத்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையை நேயர்கள் பார்த்திருப்பார்கள். நிதியின் நிர்வாகத்துக்காக தேச பக்தர் ஸ்ரீ கே. பாஷ்யம், சென்னை மேயர் ஸ்ரீ எம். ராதாகிருஷ்ண பிள்ளை முதலியோர்கள் அடங்கிய கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிக்கு உதவி செய்வோர் தேசத் தொண்டுக்குத் தேசத் தொண்டும், தர்மத்துக்குத் தர்மமும் செய்யும் புண்ணியத்தைக் கட்டிக் கொள்வார்கள். 'மானேஜர், பாரத தேவி, சென்னை' என்ற விலாசத்துக்குப் பணம் அனுப்ப வேண்டும்.

நிவாரணம் அல்ல

மேற்படி அரசியல் கைதிகளின் குடும்ப நிதிக்கு, சில பத்திரிகைகளில், 'குடும்ப நிவாரண நிதி' என்று தலைப்புப் போட்டிருக்கிறார்கள். பஞ்ச நிவாரணம், கஷ்ட நிவாரணம் முதலியவை தான் சரியான சொற்றொடர்களேயொழிய, 'குடும்ப நிவாரணம்' என்பது அவ்வளவு உசிதமான சொற்றொடர் அல்ல. ('குடும்பத்தை நீக்குதல்' என்று தப்பர்த்தம் கொடுத்துவிடும்) தயவு செய்து, 'குடும்ப உதவி நிதி' அல்லது 'குடும்பப் பாதுகாப்பு நிதி' என்ற தலைப்புப் போடக் கோருகிறோம்.

ஒரு யோசனையும்......

பிரபல ஆங்கில ஆசிரியரான பர்னார்ட் ஷா மரண தண்டனையை எப்படி நிறைவேற்றி வைக்க வேண்டும் என்பதைப் பற்றிச் சமீபத்தில் தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார். அதாவது, "உபத்திரவமில்லாமல், தொந்தரவு இல்லாமல் குற்றவாளியின் உயிரைப் போக்கிவிடுவதே நாகரிகமான முறை; இப்பொழுது கையாளப்படும் முறை பயங்கரமானது; வெறுக்கத் தக்கது" என்று அவர் கூறுகிறார். ஷா உபத்திரவமில்லாத, நோகாத மரண தண்டனை விதித்து, குற்றவாளிகளை மட்டுமல்லாமல், பைத்தியக்காரர்கள், 'பிறருக்குச் சகிக்க முடியாத உபத்திரவம் கொடுக்கும் முட்டாள்கள்'—எல்லாரையும் சமாப்தி செய்து விடலாம் என்றும், இதனால் சமூகத்துக்கு எவ்வளவோ லாபம் உண்டாகும் என்றும் அவர் தெரிவிக்கிறார்.

அதில் சந்தேகமும்

குற்றவாளிகளுக்கும் பைத்தியக்காரர்களுக்கும் அத்தகைய தண்டனை விதிப்பது சுலபமாயிருக்கலாம். ஆனால் 'பிறருக்குச் சகிக்க முடியாத உபத்திரவம் கொடுக்கும் முட்டாள்'களுக்கு மேற்படி தண்டனை அளிப்பதில்தான் கஷ்டம் இருக்கிறது.

உதாரணமாக, ஏகாதிபத்ய வெறி பிடித்த பீவர்புருக்கின் சொந்தப் பத்திரிகை ஒன்றில் சமீபத்தில் ஒரு கட்டுரை வெளியாகி இருக்கிறது. "சாம்ராஜ்யத்தினால் பிரிட்டனுக்கு லாபமே தவிர கஷ்டம் இல்லை. சாம்ராஜ்ய நாடுகளில் முதல் போட்டுச் செல்வத்தை விருத்தி

"செய்து கொள்வது நமது கடமை, நமது பாக்கியம், நமது உரிமை!" என்று கொஞ்சமும் வஞ்சனையில்லாமல், ஒளிமறைவு இல்லாமல் கூறுகிறது. அதுவும், நான்கு சுதந்தரங்களுக்காக இந்த யுத்தம் நடப்பதாக ரூஸ்வெல்ட் ரேடியோவில் தினமும் அலறிக் கொண்டேயிருக்கும் போது, அட்லாண்டிக் சாஸனம் உலகத்துக்கு முழுதும் உண்டு என்று யால்ட்டாவில் நேசத் தலைவர்கள் போட்ட கையெழுத்து இன்னும் உலராமல் இருக்கும் போது, மேற்படி பத்திரிகை சாம்ராஜ்யத்தைப் பற்றியும் அதில் உள்ள லாபத்தைப் பற்றியும் கனவு காண்கிறது!

இத்தகைய ஏகாதிபத்ய வெறியர்கள் இந்தியாவுக்குச் செய்து கொண்டிருக்கும் இடைஞ்சல் சகிக்கவில்லை தான். ஆனால் பர்னார்ட் ஷா சொல்வதுபோல் இவர்கள் 'பிறருக்கு இடைஞ்சல் செய்யும் முட்டாள்களா?' அல்லது கெட்டிக்காரர்களா என்பது தான் நமக்குத் தெரியவில்லை. எனவே இவர்களுக்குத் தண்டனையோ, சன்மானத்தையோ கொடுக்கும் வேலையையும் ஸ்ரீ பர்னாட்ஷாவுக்கே விட்டுவிட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

பெத்த பெருமாள்!

வருஷத்திற்கு ஒரு கோடி ரூபாயை விழுங்கிக் கொண்டிருந்த 'தேசியப் போர் முன்னணி' என்ற ஸ்தாபனத்தை எடுத்துத் தலை முழுக வேண்டும் என்று மத்திய சட்ட சபையிலும் வெளியிலும் கரடியாய்க் கத்திக் கொண்டிருந்ததற்குக் கடைசியாகப் பலன் கிட்டியது. மேற்படி திவ்ய நாமதேயத்தின் பேரில் நடந்து வந்த ஸ்தாபனத்தை சர்க்கார் முடிவு செய்துவிட்டு அதே மூச்சில் "வாலு போச்சு கத்தி வந்தது" என்ற கதையாக மற்றொரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தப் போவதாகக் கூறுகிறார்கள்.


இந்தப் புதிய ஸ்தாபனத்துக்குப் பெயர்தான் புதிதே ஒழிய காரியாம்சத்திலும், பணம் விழுங்குவதிலும் இது 'பழைய கருப்ப'னுக்குச் சற்றும் பின் வாங்கியதல்ல. வித்தியாசம் என்னவென்றால், பழைய ஸ்தாபனம் யுத்தப் பிரசாரம் செய்வதாகச் சொல்லிக் கொண்டு பணத்தை ஏப்பம் விட்டுக் கொண்டிருந்தது. புதிய ஸ்தாபனம், யுத்தத்தினால் ஏற்பட்ட 'கன்ட்ரோல்'களைப் பற்றியும், 'ரேஷன்' முறைகளைப் பற்றியும் பொது ஜனங்களுக்கு விளக்கி வியாக்கியானம் செய்து கொண்டே பணத்தை விழுங்கி ஏப்பம் விடுமாம்.

"பெருமான்" என்ற பெயர் காதுக்கு நன்றாயில்லை என்று எஜமான் பண்ணையாளுக்குப் பணம் கொடுத்து வேறு பெயர் வைத்துக்கொண்டு வரச் சொன்னாராம். பண்ணையாள் திரும்பி வந்து "பெத்த பெருமான்" என்று பெயர் வைத்துக் கொண்டதாகச் சொன்னானாம். அந்தக் கதைதான் போலிருக்கிறது.

தெருவெல்லாம் தமிழ் முழக்கம்

நாளது மார்ச் மாதம் 11-ம் தேதி ஞாயிற்றுக் கிழமை, கவி சுப்ரமண்ய பாரதியார் தமது சூக்ஷ்ம சரீரத்தில் சென்னையை அடுத்த பெரம்பூருக்கு வந்து பார்ப்பாரானால், தமது கவிதைக்கு இவ்வளவு அற்புதமாய்ப் பலித்திருப்பதை அறிந்து, ஆச்சரியக் கடலில் மூழ்கி விடுவார். அன்று காலை 8-மணிக்கு, பெரம்பூர் தமிழர் மன்றத்திலிருந்து தமிழ் முழக்க ஊர்வலம், சென்னை மேயர் ஸ்ரீ ராதாகிருஷ்ணப் பிள்ளையவர்களால் தொடங்கி வைக்கப்படும். சிறந்த தமிழ்ப் புலவர்கள் பலர் அடங்கிய ஊர்வலக் கூட்டம், திரு பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமையில், பெரம்பூரிலுள்ள பல வீதிகளின் வழியாகவுஞ் செல்லும். ஊர்வலத்தின் போது, வீதிகளில் ஆங்காங்கு நின்று, புலவர் பெருமக்கள் பதினெட்டுப் பேர், திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்றுவார்கள். மாலை 4 மணிக்கு, திரு ரா. பி. சேதுப் பிள்ளை தலைமையில் பெரிய சொற்பொழிவுகள் வேறு நடக்கப் போகின்றன. "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்ற பாரதியார் வாக்கை இவ்வளவு விமரிசையாக நடத்தி வைக்கப் போகும் பெரம்பூர் தமிழன்பர்களைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

நிகழ்ச்சிச் சித்திரம்



-உம்மன்


தேசியப் போர் முனையைக் கலைக்க
வேண்டும் என்று மத்திய சட்ட சபை
தீர்மானித்திருக்கிறது.
போ உள்ளே
உள்ளே போ
போ உள்ளே
தேசியப் போர் முனை
உன் துப்பாக்கியை முதலில்
இங்கு கொடு! பின்னர் பேசலாம்.
பொது உடைமைக்காரர்கள் தங்கள்
சேனையைத் தம் சேனையுடன் இணைத்தால்-
தான் அவர்களுடன் சமரசம் பேச முடியும்
என்று ஸ்ரீ சியாங்-கை-ஷேக் கூறுகிறார்.
இப்பொழுது காற்று நேச தேசத்தினருக்கு
அனுகூலமாக அடிப்பதால் அவர்கள் பக்கம்
திரும்பி விட்டார் ஜெனரல் பிராங்கோ
நேச நாடுகள்
அச்சு நாடுகள்

உலகத்துக்கு யோகம்

மகா-ா-ா-ஸ்ரீ மகாகனம் பொருந்திய உருண்டை மூஞ்சி உலகத்துக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்களைக் கூறுகிறோம்.

உலகத்துக்கு யோகம் பிறந்து விட்டது! அதிர்ஷ்டம் அபாரமாய் அடிக்கப் போகிறது!

உலகத்தில் இனிமேல் யுத்தம் என்பது தலைகாட்டப்போவதில்லை. ஹிட்லர், முஸோலினி முதலிய அரக்கர்கள் இனிமேல் உலகத்தை உபத்திரவிக்க மாட்டார்கள். இன்னும் விருத்திராசுரன் என்ன, சூரபத்மன் என்ன — இப்பேர்ப்பட்ட அசுர வர்க்கங்களும் உலகத்தைத் தொந்தரவு செய்ய மாட்டார்கள்.

உலகத்தின் கவலைகளைத் தங்கள் தலை மேற்போட்டுக் கொண்டு உலகத்தைப் பாதுகாப்பதற்காக அமெரிக்காவைச் சேர்ந்த சான்பிரான்ஸிஸ்கோ நகரில் மகாநாடு கூடப் போகிறார்கள். உலகத்தின் வல்லரசுகளும் சிற்றரசுகளும் தங்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பப் போகிறார்கள். எல்லாரும் கூடி ஆலோசித்து, உலகத்தை நிரந்தர சமாதானம் என்னும் இரும்புக் கவசத்தினால் மூடி விடப் போகிறார்கள்.

அப்புறம் உலகத்தில் யுத்தம் என்கிற பேச்சே கிடையாது. வல்லரசுகள் எப்போதும் வல்லரசுகளாகவே இருக்கலாம். சிற்றரசுகள் எப்போதும் சிற்றரசுகளாகவே இருக்கலாம். சாம்ராஜ்யங்கள் சாம்ராஜ்யங்களாகவே இருக்கலாம். அடிமை நாடுகள் அடிமை நாடுகளாகவே இருக்கலாம். வெள்ளைக்காரர்கள் வெள்ளைக்காரர்களாகவே இருக்கலாம். கறுப்பர்கள் கறுப்பர்களாகவே இருக்கலாம்.

இப்படியாக, உலகம் பாதுகாக்கப் படப் போகிறது! சான்பிரான்ஸிஸ்கோவில் கூடும் தேசநாட்டுப் பிரதிநிதிகளின் உலக மகாநாட்டினால் பாதுகாக்கப்படப் போகிறது!

• • •

ஆனா! மேற்படி சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்காகச் சமீப காலத்தில் உலகிலே என்னென்ன தடபுடல் சம்பவங்கள் நடந்திருக்கின்றன, தெரியுமா?

திடீரென்று, துருக்கி ஜெர்மனியின் மீது போர் தொடுத்தது!

சடாரென்று, எகிப்து ஜெர்மனியின் மீது யுத்தம் ஆரம்பித்தது!

பின்லாந்து ஜெர்மனியின் மீது சண்டை தொடங்கிற்று!

ஈரான் ஜப்பான்மீது யுத்தம் ஆரம்பித்தது!

மேற்படி தேசத்தினர் எல்லாம் யுத்தத்தில் இறங்குவதற்கு முன், தர்மா தர்மங்களைப் பற்றியோ நியாய அநியாயங்களைப் பற்றியோ யோசித்தார்களா என்றால், கிடையாது! "ஜனங்களின் யுத்தமா, இல்லையா?" என்று விசாரித்தார்களா என்றால், கிடையாது! "யுத்த லட்சியங்கள் என்ன?" என்றாவது கேட்டார்களா என்றால், அதுவும் இல்லை!

இப்பேர்ப்பட்ட தர்மாதர்ம விவேகிகளையும், நியாய அநியாய விவாதிகளையும், இலக்ஷ்ய விசாரணை செய்யும் தத்துவ சாஸ்திரிகளையும் நமது பழம் பெருமை வாய்ந்த பரதகண்டத்திலே தான் இந்தக் கலியுகத்திலே காணலாம்!

மேற்படி துருக்கி முதலிய தேசங்களோ, எந்தக் கட்சி ஜெயிக்கிற கட்சி என்பதை மாத்திரம் பார்த்துக்கொண்டு யுத்தத்தில் இறங்கிவிட்டன! கேவலம், சான்பிரான்ஸிஸ்கோ உலகப் பாதுகாப்பு மகாநாட்டில் இடம் பெறுவதற்காக மட்டுமே அவை போரில் குதித்துவிட்டன! தர்ம யுத்தமா அதர்ம யுத்தமா என்பதைப் பற்றிச் சிறிதும் ஆராய்ச்சி செய்யவில்லை. "ஜனங்களின் யுத்தமா? மிருகங்களின் யுத்தமா?" என்றும் விவாதிக்கவில்லை. கேவலம், சுயநலம் ஒன்றையே கருதி யுத்தத்தில் இறங்கிவிட்டன. இறங்கி, சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிலும் இடம் பெற்றுவிட்டன!

இப்படிப்பட்ட சுயநலப் பிண்டங்களான தேசங்களின் பிரதிநிதிகள் கூடி உலகத்தின் நன்மையை என்ன பாதுகாத்து விடப் போகிறார்கள் என்று கேட்டால், உண்மைதான்! உலகத்தின் நன்மையைப் பாதுகாப்பதற்காக மேற்படி மகாநாடு கூடுகிறது என்று யாராவது நம்பினால், அவர்களைப் பல்லை உடைத்துத் தொட்டியிலே போட்டு ஆட்ட வேண்டியதுதான். யுத்தத்தில் ஜெயிக்கும் வல்லரசுகள் தங்களுடைய அந்தஸ்தையும் தன்மைகளையும் ஸ்திரமாகப் பாதுகாத்துக்

கொள்வதற்காகத்தான் இந்த மகா நாட்டைக் கூட்டுகிறார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. ஆகையினால்தான் சிறு தேசங்கள் எல்லாம் இந்தச் சந்தர்ப்பத்தில் தங்கள் தங்கள் கட்சியை எடுத்துச் சொல்லித் தத்தம் நன்மையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சான்பிரான்ஸிஸ்கோ செல்லுகின்றன. இப்போது ஆப்பை விட்டுவிட்டு, பின்னால் வாலைப் பிடிக்க முயலக் கூடாது என்பது அந் நாடுகளின் எண்ணம். உலக விவகாரங்கள் தாங்கள் வரவில்லை என்பதற்காகத் தடைப்பட்டு நிற்கமாட்டா.—இழுத்துப் பிடித்துக் கொண்டு போய் நம்முடைய கட்சியை நாம் எடுத்துச் சொன்னால் தான் பிழைக்கலாம் என்பதை அந்தந்த நாட்டார் அறிவார்கள். ஆகையினால் தான், உலக மகாநாட்டில் தங்கள் கட்சியை எடுத்துச் சொல்லும் உரிமைக்காக, தங்களுக்குச் சிறிதும் சம்பந்தம் இல்லாத யுத்தத்திலே சேருவதற்கும் துருக்கி முதலிய நாடுகள் முன் வந்தன!

* * *

மேற்கண்டவாறு உலகத்தின் தேசங்கள் எல்லாம் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடுகிற சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்கு நமது இந்தியா தேசம் அழைக்கப்படுமோ, அழைக்கப் படாதோ என்பது பற்றி இரண்டு வாரத்திற்கு முன் ஒரு பிரச்னை கிளம்பித் தேசத்தைக் கலக்கிற்று. ஒரு வேளை, அழைக்காமல் விடப்படலாம் என்று சேதி வந்தபோது, இந்திய அரசியல் வட்டாரங்களில், "ஆஹா! இதென்ன அநியாயம்!" என்ற கோஷம் எழுந்தது. ஆயிரம் பேனாக்கள் நெருப்பைக் கக்கின. பதினாயிரம் அச்சு இயந்திரங்கள் தீ உமிழ்ந்தன.

கடைசியாக, மேற்படி மகாநாட்டுக்கு அழைக்கப்படும் தேசங்களில் இந்தியாவும் ஒன்று என்ற சேதி வந்ததும் சிறிது அமைதி உண்டாயிற்று.

ஆனால், உடனே, "இதனால் என்ன பிரயோஜனம்? சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்கு இந்திய அதிகார வர்க்கத்தின் பிரதிநிதிகள் தானே போவார்கள்? இந்தியாவின் உண்மை ஜனத் தலைவர்கள் போக மாட்டார்களே?" என்ற முறையீடும் ஒரு பக்கத்தில் எழுந்திருக்கிறது.

இவ்விதம் உலகப் பாதுகாப்பு மகா நாட்டுக்கு இந்தியாவின் உண்மைப் பிரதிநிதிகள் போவதற்குப் பதிலாக அதிகார வர்க்கப் பிரதிநிதிகள் போகும்படி ஏற்பட்டிருக்கும் நிலைமைக்கு என்ன காரணம்?

கேட்பானேன்?

இங்கிலீஷ்காரனுடைய அதிர்ஷ்டம் தான் காரணம்!

உலகத்தின் காரியங்கள் இன்னமும் இங்கிலீஷ்காரனுடைய இஷ்டப்படியே நடக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருப்பதுதான் காரணம்!

அவ்விதம் ஏற்பட்டிரா விட்டால், இந்தியாவின் தப்பிலே போ இராஜ தந்திரம் என்பது அடியோடு ஏன் சூன்யமாகப் போயிருக்க வேண்டும்?

யுத்த காலத்தில் தேச பக்தர்களும் தேசிய வாதிகளும் அரசாங்க அதிகாரங்களைக் கூடிய வரையில் கைப்பற்றுவதற்குப் பதிலாக எல்லாம் அதிகார வர்க்கத்தின் இஷ்டப்படியே நடக்கும்படியாக ஏன் விட்டிருக்க வேண்டும்?

* * *

நமது நாட்டில் இராஜ தந்திரம் என்பது எவ்வளவாக சூன்யமாகப் போய் விட்டது என்பதை நன்கு தெரிந்து கொள்ள வேண்டுமானால், சமீபத்தில் சர் ஸபருல்லாகானைப் பற்றித் தேசமெங்கும் பாடப்பட்ட ஆவேசப் புகழுரைகளைக் கவனிக்க வேண்டும்.

சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்குப் பூர்வாங்கமாக, லண்டனில் சாம்ராஜ்ய மகாநாடு ஒன்று சென்ற மாதத்தில் நடந்தது. மேற்படி மகாநாட்டுக்கு இந்திய சர்க்காரின் பிரதிநிதிகளாக மாஜி பெடரல் கோர்ட் ஜட்ஜ் சர் ஸபருல்லா கான், சர் மகாராஜ் சிங் முதலியோர் அனுப்பப் பட்டிருந்தார்கள். ஆஸ்திரேலியா, கானடா முதலிய எல்லா பிரிட்டிஷ் காலனிகளிலிருந்தும் பிரதிநிதிகள் ஆஜராயிருந்த மேற்படி மகாநாட்டில் சர் ஸபருல்லா கான் இந்தியாவின் சுயாட்சிக் கோரிக்கையை பயமின்றியும் கொஞ்சம் கூடத் தொடை நடுங்காமலும் நிர்த்தாட்சண்யமாகவும் எடுத்து வெளியிட்டார்.

"இந்தியப் படை வீரர்கள் இருபத்தைந்து லட்சம் பேர் இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். பிற நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க, இந்தியா இன்னமும் தன்னுடைய சுயாட்சியைக் கோரி முறையிட்டுக் கொண்டிருக்கும்படி விடுவது நியாயமா? பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள் இந்தி

யாவுக்குப் பூரண சுயாட்சி கொடுக்கப்பட வேண்டும். இந்தியத் தலைவர்கள் தங்களுக்குள் ஒரு சமரச முடிவுக்கு வராவிட்டால், பிரிட்டனே ஏதேனும் ஒரு ஏற்பாட்டைச் செய்து இந்தியாவுக்குச் சுயாட்சி தந்துவிட வேண்டும்'' என்று ஸபருல்லாகான் கூறினார்.

இதைக் கேட்டுத்தான் இந்தியாவின் தேசிய வீரர்கள் ஆச்சரியத்தில் மூழ்கிப் போய் விட்டார்கள். "ஆஹா, இந்திய சர்க்கார் அனுப்பிய பிரதிநிதியே இந்திய சர்க்காரைக் கைவிட்டு விட்டாரே! இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையை வெளியிட்டு விட்டாரே! 'சர்' பட்டம் பெற்ற மாஜி பெடரல் கோர்ட் ஜட்ஜ் இப்படிப் பேசிவிட்டாரே!'' என்று நம்மவர்கள் அலமந்து போகிறார்கள்!

கொஞ்சம் யோசித்துப் பார்த்தோமானால், சர் ஸபருல்லாகான் மேற்கண்டவாறு பேசியதனால் இந்தியாவுக்குச் செய்து விட்ட நன்மையைக் காட்டிலும் பிரிட்டனுக்குத்தான் அதிக நன்மையைச் செய்திருக்கிறார் என்பது தெரிய வரும்.

முதலாவது, உலக மகா நாடுகளுக்கு இந்திய சர்க்கார் தேர்ந்தெடுத்து அனுப்பும் பிரதிநிதிகள் இந்திய மக்களின் கோரிக்கைகளை வெளியிடும் உண்மையான பிரதிநிதிகள்தான் என்று உலகம் நினைக்கும்படியாக சர் ஸபருல்லா செய்து விட்டார்.

இதனால், சான்பிரான்ஸிஸ்கோவுக்குப் போகும் இந்திய சர்க்கார் பிரதிநிதிகளுடைய அந்தஸ்தும் உயர்ந்து விடப் போகிறது.

இங்கிலீஷ்காரனுடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!

ஆனால் சர் ஸபருல்லாகான் அப்படி இந்தியர்களின் உண்மையான மனோபாவங்களை உள்ளபடி வெளியிட்டு விட்டாரா? பிரிட்டிஷாருக்கு மனக்கசப்பு அளிக்கும் விஷயத்தைப் பேசி விட்டாரா? - என்று சிறிது கவனிப்போம்.

அவர் பேச்சிலிருந்து ஸ்தாபிதமாகும் மூன்று விஷயங்கள் வருமாறு:

1. இந்தியா இருபத்தைந்து லட்சம் வீரர்களை யுத்தத்துக்கு அனுப்பிச் சாம்ராஜ்ய சேவை செய்திருக்கிறது.

(இதிலிருந்து, காங்கிரஸ் இந்தியாவில் செல்வாக்கற்ற ஸ்தாபனம் என்றும், காங்கிரஸின் யுத்தக் கொள்கையைப் பொதுஜனங்கள் ஆதரிக்கவில்லை என்பதும் தெளிவாகிறது.)

2. இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு உட்பட்ட சுயாட்சியைத்தான் கோருகிறது.

(காங்கிரஸின் பூரண சுதந்தரக் கோரிக்கை இதனால் அடிபட்டுப் போகிறது.)

3. இந்தியத் தலைவர்கள் தங்களுக்குள் சமூக உரிமைகளைப் பற்றி ஒரு ஒற்றுமையான முடிவுக்கு வராவிட்டால், பிரிட்டனே ஒரு முடிவு ஏற்படுத்தி இந்தியாவின்மேல் சுமத்த வேண்டும்.

('இங்கிலீஷ்காரன் வெளியே போனால் நம்முடைய வேற்றுமைகள் தீர்ந்து போகும்' என்ற காங்கிரஸின் கட்சி இதனால் அடிபட்டுப் போய், பிரிட்டனே இந்தியாவின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் அதிகாரி என்பது ஊர்ஜிதமாகிறது.)

இந்த விஷயங்கள் எல்லாம் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்கு ஏன் மனக்கசப்பை அளிக்க வேண்டும்? அவர்கள் மனமுவந்து வரவேற்கக் கூடிய யோசனைகள் அல்லவா இவை?

பிரிந்து போகும் சுதந்தரம் உள்படப் பூரண சுயாட்சி உரிமை கொடுப்பதாக கிரிப்ஸ் திட்டத்திலேயேதான் வாக்களித்திருக்கிறார்களே! அதிலிருந்து மெதுவாகப் பின்வாங்கி, ராம்ஸே மாக்டனால்டின் வகுப்புத் தீர்ப்பைப் போல ஒரு தீர்ப்பையும், மகாராஜாக்கள் — பட்டதாரிகள் முதலியோருடைய செல்வாக்கு உயர்ந்திருக்கும்படியாக ஓர் அரசியல் திட்டத்தையும் இந்தியாவின் மேல் சுமத்துவதற்கல்லவா சர் ஸபருல்லாவின் யோசனைகள் சாதகமாயிருக்கின்றன? பிரிட்டிஷாருக்கு ஏன் மனக்கசப்பு ஏற்பட வேண்டும்?

அல்லது, சர் ஸபருல்லா கானின் பேச்சைக் குறித்து நாம் இவ்வாறு குதூகலப்படுவதாயிருந்தால், கிரிப்ஸ் திட்டத்தை எதற்காக ஒதுக்கித் தள்ளியிருக்க வேண்டும்?

தேசத்தின் முக்கிய தலைவர்கள் எல்லாரும் வருஷக் கணக்காகச் சிறையிலிருந்து தேக ஆரோக்கியத்தை ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்?

ஆறு வருஷ காலமாக இந்திய அதிகார வர்க்கம் இஷ்டப்படி ஆட்சி நடத்தும்படி விட்டுவிட்டு, லட்சக்கணக்கான ஜனங்கள் பஞ்சத்தில் மடியவும்

கோடானு கோடி ரூபாய் கடன் இந்தியாவின் தலைமேல் ஏறவும் ஏன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்?

* * *

சர் ஸாபருல்லா கானுக்குப் பதிலாக, பண்டித ஜவாஹர்லால் நேரு மேற்படி சாம்ராஜ்ய மகாநாட்டுக்குப் போயிருந்தால், இப்படித்தான் பேசியிருப்பாரா என்று ஒரு கணம் யோசனை செய்து பாருங்கள்.

ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்கு சர் பெரோஸ்கான் நூன் போன்றவர்கள் போவதற்கு பதிலாக பண்டித ஜவாஹர்லால் நேருவோ, ஸ்ரீ வல்லபாய் படேலோ போகக்கூடுமானால் இந்தியாவின் அந்தஸ்து உலகத்தின் முன்னால் எவ்வளவு உயரும் என்பதையும் யோசித்துப் பாருங்கள்.

அமெரிக்காவில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் ஒருவர் செய்யும் பிரசாரத்தைக் கண்டு "டெய்லி மெயில்" நிருபர் முதலியோர் ஏன் இவ்வளவு மிரளுகிறார்கள் என்பதையும் கவனியுங்கள்.

மேற்படி ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிலேயே, ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி இந்தியாவின் கட்சியை எடுத்துச் சொல்ல முடியுமானால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

யுத்தத்தில் ஜெயித்த வல்லரசுகளுடன் தந்தம் உரிமைகளுக்காக மன்றாடப் போகும் சிறு நாடுகளுக்கும், சீனா முதலிய கீழ் நாடுகளுக்கும் இந்தியாவின் உண்மைப் பிரதிநிதிகள் எவ்வளவு பலம் அளித்திருப்பார்கள்?

அப்போது, உலகத்துக்கு உண்மையாகவே அல்லவா அதிர்ஷ்டமும் யோகமும் பிறந்து விடும்!

நடந்திருக்கக் கூடியதையும் நடக்கப் போவதையும் யோசிக்கும்போது, உலகத்துக்கு அவ்வளவு சீக்கிரம் நல்ல காலம் பிறப்பதற்குக் கடவுளுக்கும் சித்தமில்லை என்று தோன்றுகிறது.

அதனால்தான் இந்தியாவில் நாம் விழலுக்கு நீர் பாய்ச்சும் வேலையில் ஈடுபட்டிருக்கிறோம். அதையே வீரச் செயல் என்று சொல்லி உண்மையை எடுத்துக் கூறுகிறவர்களையும் திட்டிக் கொண்டிருக்கிறோம்.

இவ்வளவுக்கும் காரணம், இங்கிலீஷ்காரனுடைய அதிர்ஷ்டந்தான்!

வான சஞ்சாரம்

இசைத்தேன்

இரண்டு இனிய குரல்கள் சேர்ந்து பாடுவதில் ஓர் பிரத்யேக அழகு இருக்கிறதென்று அடிக்கடி சொல்லியிருக்கிறேன். அவ்விரண்டும் இனிமை மிகுந்து, எவ்விடத்தும் இணை பிரியாது இழைந்து வந்து, அத்துடன் கமகப் பிடிகளும் நாஸூக்கு வழியும் சேர்ந்து விட்டால் கேட்கவேண்டுமா? அத்தகைய சங்கீதம் பிப்ரவரி 28ல் திருச்சியிலிருந்து கேட்டது. பாடியவர்கள் கே. வைத்தியும் ஆனந்தமும் என்றறிந்தேன். பாட்டில் அழுத்தமும் சங்கதிகளில் தெளிவும் கண்டன. ''மானஸகுருகுஹ''வும், கேதாரகௌளையில் ''அந்தராம சௌந்தரியம்'' உருப்படியில் ஒருவர் கீழ்ஸ்தாயியிலும் மற்றவர் மேலேயும் சேர்ந்து பாடியதும் வெகு சுகமாயிருந்தது.

மார்ச் 2ல் சென்னையில் பாடிய மாயவரம் ஆர். கணேசனுக்கு ஞானபலத்தில் குறையில்லையென்பது பைரவி, விஜயநாகரி, தோடி ராகங்களிலிருந்தும், ''ஸரஸிஜநாப''வின் நிரவல் ஸ்வரங்களிலிருந்தும் தெரிந்தது. ஆனால் இவர் சாதக முறையும் தொண்டையைக் கொடுக்கும் மாதிரியும், சற்று விசித்திரமாயிருந்தது. உற்று கவனித்தவர்களுக்கு, நாஸூக்குக்கு ஆசைப்படாத, சில வயதான ஹிந்துஸ்தானி உஸ்தாத்துகளின் அசுர சாதகம்போல் தென்பட்டிருக்கும். எல்லோருந்தான் வரட்டு பிர்க்காக்களை அளக்கிறார்களே, இப்படியும் ஒரு வழி கர்நாடக சங்கீதத்தில் இருக்கட்டுமே என்று வழங்கினார் போலும்!

அன்றைய தினக் கச்சேரிகளில் பெரும்பான்மையோர் திருச்சியில் நடந்த திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை, நடராஜசுந்தரம் பிள்ளை இவர்களின் நாதஸ்வரக் கச்சேரியை ஆவலுடன் கேட்டிருப்பார்கள். நீடாமங்கலம் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையின் தவிலும் சேர்ந்து விட்டால் வேறென்ன வேண்டும்? சங்கீத மேதையாம் ராஜரத்தினத்துக்கு அமைந்திருக்கும் வாத்யத் தனி ஒலியழகும், பாணியும், பிடிகளின் ஒய்யாரமும் வழக்கம் போல் குறைவறக் கண்டன. கல்யாணி, மோஹனம் முதலிய ராகங்களோடு வாசஸ்பதியைப் பல்லவி ராகமாய் எடுத்து, பல்லவியுடன் ராகமாலிகையை வழங்கியதும் வனப்பாயிருந்தது. தவில் வித்வானும், தன் தனித் திறமையைக் காட்டினார். ஆனால் அவர் அன்றுமிதமாகவே பக்கவாத்யமாய் வாசித்ததும், நாதஸ்வர வித்வான், எதையும் வெகு நேரம் இழுக்காமலும் தவிலுக்காகத் தன் பாணியை மாற்றியமைத்துக்கொள்ளாமலும், ரேடியோவில் அகப்படும் குறுகிய நேரத்துக்குள்ளேயே பல ராகங்களையும் உருப்படிகளையும் வாசித்து 'பிஸினஸ்' கச்சேரியாய்ச் செய்ததும்தான் கொஞ்சம் விசேஷம்.

3ல் சென்னையில் கேட்ட சித்தூர் சுப்ரமணிய பிள்ளையின் கச்சேரியில் உருப்படிகளெல்லாம் விமரிசையாயிருந்தன. கல்யாணி, ஷண்முகப்பிரியா ராகங்களும் குறிப்பிடத்தக்கவை. தோடி, கல்யாணி உருப்படிகளில் கண்ட நிரவல் ஸ்வரங்களும் பிரமாதமாயிருந்தன.

4ல் சென்னையில் எஸ். பாலசுப்ரமணியன் பாட்டும் அபிராமசுந்தரியின் வயலினும் சிறந்த கச்சேரிகள் எனலாம். முன்னவர், உதவுபடி மிகுந்த குரலில் அழகிய சஞ்சாரங்களோடு வழங்கிய ராகங்களில் சங்கராபரணம், தோடி, மோஹனம் இவைகள் நிதானமாய் வெளிவந்தன. அபிராமசுந்தரியின் முதல் பாக சங்கீதத்தைத்தான் கேட்க முடிந்தது. அதில், சாவேரி சிறப்பாயிருந்தது.

மன்னார்குடி ராஜகோபால பிள்ளை நன்மதிப்புள்ள வீணை வித்வான். நயமான சாரீரமும் உயரிய ஞானபலமும் கொண்டவர். 5ல் கச்சேரிகளில், திருச்சியில் நடந்த அவரதே சிறந்து விளங்கியது. ஸ்ரீரஞ்சனி, பிலஹரி, கல்யாணி, மோஹன ராகங்களோடு, தோடி, சங்கராபரணம் இவைகளாகிய ஒரு ராகமாலிகையையும் கையாண்டார். பிலஹரி உருப்படியில் ஸ்வரம் ஜோர்.

அன்று சென்னையில் பாடிய பழனி ஆர். பாகீரதியின் தோடியையும் குறிப்பிடாமலிருக்க முடியாது. நல்ல கார்வைகளும் வளைவு குழைவுகளும் நிறைந்திருந்தன.

6ல் சென்னையில் கேட்ட இரு கச்சேரிகள் உயர்ந்த ரகமாயிருந்தன. ஒன்று, கான அனந்தகிருஷ்ணனது. ஒரு பாகத்தைத்தான் கேட்க முடிந்தது. இனிமையும் கனிப்பும் கொண்ட குரல். சுகவழி. பேகடா, பூர்வி கல்யாணி ராகங்கள் அழகு வடிவங்களாய் விளங்கின. உருப்படிகளும் கச்சிதமாயிருந்தன.

இரண்டாவது, எம். நீலகண்டய்யரது. இவரது முதல் பாட்டைக் கேட்டவுடனேயே சிறந்த ஞானஸ்தர் என்பது புலப்பட்டிருக்கும். இவர் எடுத்துக்கொண்ட ஆனந்தபைரவி, சங்கராபரணம் இரண்டில் முன்னது என் உள்ளத்தைக் கவர்ந்தது. மிகப் பழமையும் சர்வ சாதாரணமுமான இந்த ராகத்தை அறியாத ஆண் பெண் கிடையாது. ஆயினும் இதன் நிஜஸ்வரூபத்தையும் அழகையும் விளக்கும் பிரத்யேகமான பெரிய வளைவுகளும் நாஸூக்கான ஒதுக்கல்களும், இக்காலத்திய பிர்க்காப் பெருக்கிலும், கற்பனை யென்ற பெயரில் துண்டுதுண்டாய் ஒடித்துக் கொடுக்கப்படும் துணுக்குச் சங்கதிகளிலும், மறைந்து, இதன் இயற்கை வடிவம் சற்றுச் சிதைந்தே போய் வருகிறது. இதைப்பற்றி இரண்டொரு பிரபல வித்வான்களிடம்கூடப் பிரஸ்தாபித்திருக்கிறேன். அப்படியிருக்க அதற்கேற்பட்ட அழகிய வளைவுகளும் ஒதுக்கல்களும் கெடாமல், நீலகண்டய்யர் அழுத்தமாயும், அனுபவித்தும், உருக்கமாய்ப் பாடியதைக் கேட்டதும், பழைய ஞாபகங்களுடன் எனக்கு வந்த மகிழ்ச்சிக்குக் கேட்கவேண்டுமா? அது போலவே அவர் உருப்படிகளிலும் அழுத்தமும், ஸ்வரம் பாடுவதின் அழகும் என் மனதைக் கவர்ந்தன.

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: வி. ஆர். நரஸிம்மன், 108, அம்மா மண்டபம், ஸ்ரீரங்கம்.

சோம்பேறியாய் இருப்பதற்கு இது காலமல்ல

பெண்கள் ஆக்ஸிலியரி கோர் (இந்தியா) வில் வேலை செய்யப் பல ஆயிர பெண்கள் தேவையாய் இருக்கிறது. வேலையிட வசௌகரியமுள்ளதாயும் நல்ல சம்பளமுள்ளதாயும் இருக்கும். 17 முதல் 50 வயதுகளுள்ளும், இங்லிஷ் (ஆங்கிலம்) எழுதப் பேசவும் எழுதவும் தெரிந்திருக்கும் பெண்கள் மட்டுமே விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

சரியான ஹாஸ்டல்கள்: பொது சேவையிலிருக்கும் W.A.C. (I) அங்கத்தினர்களையுள்ள பொறுப்பு, அனுபவம் வாய்ந்த பெண்களின் மேற்பார்வையில் இருக்கும் வசதியுள்ள ஹாஸ்டல்களில் குடியிருக்கச் செய்கிறார்கள்.

வெற்றி: சமாதானம் திரும்ப ஏற்பட்டதும் விரோதியிடமிருந்து [illegible] சமாதானத்தை பெறுவதற்கு நம்மவர்கள் [illegible] முறைச்செய்த இந்த இந்திய பெண்களுக்குத்தான் சமாதான பலன்களை அனுபவிக்க பெரும் பாத்தியதை உண்டு.

நிரந்தர ஜீவனோபாயம்: வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் இந்தியா அதிதீவிரமாக முன்னேறி வருகிறது. வேலை சமாதானத்திற்கு வந்ததும் மேல் உதவி

போர்களுக்கு அநேக கல்வித்தேர்ச்சி பெற்ற ஆணும் பெண்ணும் தேவையாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. W.A.C. (I)யில் பெறும் பயிற்சியும் இந்த கோரில் வேலை செய்யும் சமயம் பெறும் அனுபவமும் அநேக பெண்களுக்கு யுத்தமில்லாத காலத்தில் வெற்றிகரமான ஜீவனோபாயம்பெற தேவையான யோக்யதாம்சங்களையும் [illegible] அனுபவத்தையும் கொடுக்கிறது.

விண்ணப்பித்துக்கொள்ள வேண்டிய முறை: உத்தியோகத்தின் விபரங்கள் நிபந்தனைகள் மற்ற விவரங்களையும் W.A.C. (I) யின் மெம்பர்களை A.T.R.O'S/W.A.C. (I) களிடமிருந்து ஒருவித [illegible] பெறலாம். உங்களுக்கு வேண்டிய W.A.C. (I) யைப்பற்றிய சகல தகவல்களையும் கொடுப்பதற்கு இந்தப் பெண்கள் ஆவலாய் இருப்பார்கள்.


A.T.R.O./W.A.C. I விலாசங்கள்:

மதுரை A.F.I. பில்டிங், ஹாஸ்பிடல் லேன், [illegible].

கல்கத்தா C/O D.T.R.O. 28, தியேட்டர் ரோட், லக்னோ C/O T.R.O. [illegible]. பாட்னா C/O D.T.R.O. [illegible] ரோட். ராவல்பிண்டி, [illegible] ரோட். பெங்களூர் கண்டோன்மெண்ட் கப்பன் ரோட், லாகூர் 32, டேவிஸ் ரோட். பூனா [illegible] ரோட் மற்றும் 3/18 [illegible] ரோட்.

பெண்கள் ஆக்ஸிலியரி கோர் (இந்தியா) வில் சேருங்கள்

சிவகாமியின் சபதம்





மூன்றாம் அத்தியாயம்

உடன்படிக்கை

வாதாபி சக்கரவர்த்தி புலிகேசியும் பாண்டிய மன்னன் செயந்தவர்மனும் விரைவில் மனமொத்த சிநேகிதர்களாகி விட்டார்கள்.

செயந்தவர்மனை விட்டுப் புலிகேசி பிரிந்து சென்ற போது, கொள்ளிடத்துக்கு வடகரைக்குச் செயந்தவர்மன் வந்து தன்னுடைய விருந்தாளியாயிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டான்.

அவ்விதமே செயந்தவர்மன் தன்னுடைய முக்கிய மந்திரி பிரதானிகளுடன் மறுநாள் கொள்ளிடத்தின் வடகரைக்கு வந்தான்.

புலிகேசி பிரமாத இராஜோபசாரங்களுடன் செயந்தவர்மனை வரவேற்றதுடன், தன்னுடைய நால்வகைப் படைகளையும் செயந்தவர்மனுக்குக் காட்டி அவன் பிரமிக்கும்படி செய்தான். தடபுடலான விருந்துக்குப் பிறகு, வாதாபியின் வில்லாளிகள், வாள் வீரர்கள், மல்லர்கள் முதலியோர் இரு பேரரசர்களின் முன்னிலையில் தத்தம் திறமைகளைக் காட்டினார்கள்.

பிறகு, வாதாபியின் அரண்மனைக் கவிஞர், இந்தச் சந்தர்ப்பத்துக்கேற்பத் தான் புனைந்திருந்த கவிதைகளைப் பாடினார். கணக்கற்ற வெண்கொற்றக் குடைகளினாலும், வெண் சாமரங்களினாலும் திருப்பாற் கடலைப் போல் விளங்கிய வாதாபியின் சேனா சமுத்திரமானது துங்கபத்திரை நதிக் கரையிலிருந்து பொங்கித் தெற்கு நோக்கி வந்தது பற்றியும், அதைத் தூரத்தில் கண்டதுமே காஞ்சி மகேந்திர பல்லவன் நடுநடுங்கிப் போய்த் தனது சிறு குட்டையையொத்த படையுடன் காஞ்சிக் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டது பற்றியும், பிறகு, புலிகேசி சக்கரவர்த்தி அழகிய கயல் மீன்கள் துள்ளி விளையாடும் காவேரி நதியைக் காண ஆவல்கொண்டு தெற்கு நோக்கி வந்தது பற்றியும், காவேரிக் கரையில் மதுரைப் பாண்டிய மன்னனைச் சந்தித்து அளவளாவியது பற்றியும், வாதாபியின் யானைகள் காவேரியில் வரிசையாக நின்று பாலம் அமைத்த போது காவேரியின் நீரோட்டம் தடைப்பட்டு நின்றது பற்றியும், யானைகளின் மதநீர் நதியில் விழுந்து வெள்ளம் முன்னைவிட அதிகமானது பற்றியும் வர்ணித்திருந்த கவிதைகளை வாதாபியின் இராஜ கவி பாடிய போது, பாண்டியனும் மற்ற இரு சிற்றரசர்களும் மது உண்டவர்களைப் போல் மதிமயங்கி நின்றார்கள்.

எல்லாம் முடிந்து, செயந்தவர்ம பாண்டியன் புலிகேசியிடம் விடை பெற வேண்டிய சமயம் வந்த போது, "சத்யாச்ரயா! பல்லவனை முறியடித்துக் காஞ்சியைக் கைப்பற்றிய பிறகு, அப்படியே தாங்கள் திரும்பிப் போய் விடக் கூடாது. மதுரைக்கும் வந்து விட்டுப் போக வேண்டும்!" என்றான்.

அந்த நாளில் காஞ்சிக்கு அடுத்த படியாகத் தென்னாட்டில் பிரசித்தமாக விளங்கிய மதுரைமா நகருக்குப் புலிகேசி வந்தால், பாண்டியர்களின் சீர் சிறப்புக்களையெல்லாம் காட்டி அவனைப் பிரமிக்கச் செய்யலாம் என்பது செயந்த வர்மனுடைய எண்ணம்.

அதைக் கேட்ட புலிகேசி ஒரு பெருமூச்சு விட்டான். "ஆம்; எனக்கு மதுரையையும் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் வெகு காலமாக உண்டு. காஞ்சியைப் பற்றி எழுதிய பிக்ஷு மதுரையைப் பற்றியும் எழுதியிருந்தார். ஆனால்......" என்று புலிகேசி சொல்லி வரும்போதே பாண்டியன் குறுக்கிட்டு. "ஆ! புத்த பிக்ஷுவைப் பற்றித் தங்களை நான் கேட்க வேண்டுமென்றிருந்தேன். அவர் எங்கே? தங்களுடன் அவர் இருப்பார் என்றல்லவா எண்ணியிருந்தேன்?" என்று கேட்டான்.

"பிக்ஷுவைப் பற்றித் தானே தகவல் ஒன்றும் தெரியவில்லை? உண்மையில் அவரைப் பற்றி நான் உங்களிடம் கேட்க வேண்டுமென்றிருந்தேன். மதுரைக்கு வந்திருந்தார் அல்லவா? அங்கே என்ன நடந்தது? உங்களிடம் என்ன சொல்லி விட்டுக் கிளம்பினார்! எங்கே போவதாகச் சொன்னார்? விவரமாகச் சொல்ல வேண்டும்" என்று வாதாபி மன்னன் வினவினான்.

பிக்ஷு மதுரைக்கு வந்த சமயம் தன் தந்தை காலமானது. அதனால் ஏற்பட்ட குழப்பத்தில் பிக்ஷு சிறைப்பட்டது. தனக்கு முடி சூட்டு நடந்த பிறகு பிக்ஷுவைத் தான் விடுதலை செய்தது முதலிய விவரங்களைக் கூறி விட்டுச் செயந்த வர்மன் மேலும் சொன்னதாவது:—"பிக்ஷு விடுதலையான உடனேயே, வாதாபி சைனியம் காஞ்சியை அணுகி விட்டதா என்று என்னைக் கேட்டார். 'இல்லை; இன்னும் வடபெண்ணைக் கரையிலேயே இருக்கிறது' என்று நான் தெரிவித்ததும் அவர் பெரிதும் ஆச்சரியமடைந்தார். என்னைச் சைன்யத்துடன் கொள்ளிடக் கரைக்கு வந்திருக்கும்படி சொல்லி விட்டுத் தான் முன்னால் போவதாக அவர் கிளம்பினார். பின்னர், தங்களை வந்து அவர் சந்திக்கவே இல்லையா?"

"இல்லை; அதுதான் ரொம்ப அதிசயமாயிருக்கிறது."

"என்னுடனேயே அவரும் புறப்படலாம் என்று சொன்னேன். கேட்காமல் கிளம்பினார். யாரோ ஒரு சிற்பியையும் அவனுடைய மகளையும் பற்றி ஏதோ சொன்னார். தான் முன்னால் சென்று அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதாகக் கூறினார்..."

"ஆம்; எனக்குக்கூட ஞாபகம் இருக்கிறது. சிற்பம், சித்திரம், நாட்டியம் என்றெல்லாம் பிக்ஷுவுக்குப் பைத்தியம் உண்டு. அதனால்தான் ஏதாவது சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டாரோ, என்னமோ தெரியவில்லை. அல்லது அந்த மூடன் துர்விநீதனால் இவருக்கும் ஏதாவது நேர்ந்து விட்டதோ, என்னமோ? ஒன்றுமே தெரியவில்லை. பிக்ஷு இல்லாதது எனக்கு ஒரு கையே இல்லாதது மாதிரி இருக்கிறது."

அதற்குப் பாண்டியன், "ஆமாம்; ஒரு சில நாள் பழக்கத்திலேயே பிக்ஷுவிடம் எனக்கு மிக்க மதிப்பு ஏற்பட்டு விட்டது. ஆனால், இந்தக் கங்கநாட்டான் எதற்காக இப்படி முட்டாள்த்தனமாகப் போய் அகப்பட்டுக் கொண்டான்? பிக்ஷு என்னிடம் சொன்னது ஒன்று, துர்விநீதன் செய்தது ஒன்றாக அல்லவா இருக்கிறது? ஒரு வேளை மகேந்திர பல்லவன் தப்பித்து ஓட முயன்றால், நான் கொள்ளிடக் கரையில் நின்று தடுக்க வேண்டுமென்றும், துர்விநீதன் மேற்கு எல்லையில் நின்று தடுக்க வேண்டுமென்றும் ஏற்பாடு என்பதாகப் பிக்ஷு சொன்னார். அப்படியிருக்க, துர்விநீதன் எதற்காக அவ்வளவு அவசரப் பட்டுக் கொண்டு காஞ்சியை நெருங்கினான்? புள்ளலூரில் ஏதோ பிரமாத வெற்றியடைந்து விட்டதாகப் பல்லவன் பறையடித்துக் கொள்ள இடங் கொடுத்து விட்டதே? அதனாலே அல்லவா பல்லவ நாட்டு மக்களும் சோழ நாட்டு மக்களும் கூட அசாத்தியத் திமிர்கொண்டு போயிருக்கிறார்கள்?" என்றான்.

"துர்விநீதன் விஷயம் பெரிய மர்மமாய்த்தானிருக்கிறது! அவன் உயிரோடிருக்கிறானா, செத்துப் போய் விட்டானா என்றுகூட நிச்சயமாகத் தெரியவில்லை. அவனைப் பற்றித் தெரிந்தால், பிக்ஷுவைப் பற்றியும் ஏதாவது தெரியலாம். இந்த தரித்தி

ரம் பிடித்த பல்லவ நாட்டுக் கிராமங்களில் யாரை என்ன கேட்டாலும் 'ஒன்றும் தெரியாது!' என்கிறார்கள். ஒவ்வொரு சமயம் எனக்கு வருகிற கோபத்தில், இந்தப் பல்லவ இராஜ்யத்துக் கிராமங்களில் ஒரு வீடு, ஒரு கூரை மிச்சமில்லாமல் எல்லாவற்றையும் கொளுத்திப் பஸ்மீகரம் செய்து விடலாமா என்று தோன்றுகிறது!''— இவ்விதம் புலிகேசி கூறியபோது ஏற்கெனவே கோவைப் பழம்போல் சிவந்திருந்த அவனுடைய கண்களில் அக்னி ஜுவாலை கிளம்பியது.

"ஆமாம், ஆமாம். நானும் எல்லாம் கேள்விப்பட்டேன், ஏரிகளை யெல்லாம் உடைத்துவிட்டு இந்த வருஷம் கோடை காலத்தில் சாகுபடியே செய்யாமல் இருந்து விட்டார்களாம். உங்களுடைய சைனியம் எந்தக் கிராமத்துக்குப் போனாலும் பஞ்சப் பாட்டுப் பாடுகிறார்களாம். தானியத்தை ஒளித்து வைத்துக் கொண்டு 'எங்களுக்கே சாப்பாடு இல்லை; பட்டினி கிடக்கிறோம்' என்கிறார்களாம்! பொல்லாத ஜனங்கள்!''

"அவர்களுடைய பொல்லாத்தனத்தை யெல்லாம் அடக்க எனக்கு வழி தெரியும். ஒளித்து வைத்திருக்கும் தானியங்களை எடுத்துக் கொடுக்கும்படி செய்யவும் தெரியும். அதெல்லாம் இப்போது வேண்டாம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"இந்தக் கிழைச் சோழ நாட்டுத் திமிர் பிடித்த மக்களுக்கு நானும் ஒருநாள் பாடம் கற்பிக்க வேண்டும். காஞ்சிக் கோட்டை விழட்டும் என்று தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.... இருக்கட்டும்; துர்விநீதனைப் பற்றியல்லவா கேட்டுக் கொண்டிருந்தீர்கள்? என்னுடைய ஒற்றர்கள் அவனைப் பற்றி ஏதோ சொன்னதாக ஞாபகம் இருக்கிறது. இதோ விசாரிக்கிறேன்!'' என்று செயந்தவர்மன் கூறி, தன்னுடைய ஒற்றர் படைத் தலைவனை வரவழைத்துக் கேட்டான்.

ஒற்றர் தலைவன் கூறியதாவது:— "நம்முடைய சைன்யம் காவேரியைத் தாண்டிக் கொள்ளிடத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது, புள்ளலூர்ச் சண்டையைப் பற்றிய செய்தி வந்தது. உடனே நமது கெட்டிக்கார ஒற்றர்கள் சிலரை நான் அனுப்பி நிலைமையை விசாரித்து வரச் செய்தேன். புள்ளலூரில் தோல்வி யடைந்து கங்கராஜா தெற்கு நோக்கி ஓடி வந்ததாகவும், அவனை மாமல்லர் துரத்தி வந்ததாகவும், திருப்பாற்கடல் என்னும் பெரிய ஏரி உடைத்துக் கொண்டு மாமல்லரைத் தடை செய்ததாகவும், இதனால் கங்கராஜா தென் பெண்ணைக்கு இக் கரை வந்து, பாடலிபுரத்துச் சமணர் பள்ளியில் ஒளிந்து கொண்டதாகவும் தெரிந்தது. பிறகு என்ன நடந்ததென்று தெளிவாகத் தெரியவில்லை. திருக்கோவலூர் கோட்டைத் தலைவன் சமணப்பள்ளியைத் தாக்கி இடித்துக் கங்க மகாராஜாவைச் சிறை பிடித்துக் கொண்டு போனதாக ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். திருக்கோவலூருக்குத் தெற்கேயுள்ள மலைப் பிரதேசத்தில் சிறை வைத்திருப்பதாகவும் வதந்தியாம்.''

பிறகு, பேரரசர்கள் இருவரும் கலந்தாலோசித்துப் பின்வரும் திட்டத்தை வகுத்துக் கொண்டார்கள்:— புலிகேசி காஞ்சிக்குத் திரும்பிச் சென்று கோட்டை முற்றுகையை இன்னும் தீவிரமாய் நடத்த வேண்டியது. காஞ்சிக் கோட்டை விழுகிற வரையில், வாதாபி சைன்யத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பாண்டியன் சோழ நாட்டிலிருந்து அனுப்பிக் கொண்டிருக்கவேண்டியது.

கொள்ளிடத்தில் தண்ணீர் குறைந்ததும் பாண்டியன் தன் சைன்யத்துடன் நதியைத் தாண்டி வந்து தென் பெண்ணை வரையில் முன்னேறி ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டியது. திருக்கோவலூர் கோட்டைத் தலைவனைப் பிடித்துத் தண்டிப்பதுடன், அங்குள்ள மலைப் பிரதேசத்தில் துர்விநீதன் சிறைப்பட்டிருப்பது உண்மையானால் அவனை விடுதலை செய்ய வேண்டியது.

இந்த உதவி யெல்லாம் பாண்டியன் செய்வதற்குக் கைம்மாறாகக் குமரி முனையிலிருந்து தென் பெண்ணை வரை உள்ள தக்ஷிணப் பிரதேசத்தின் சக்கரவர்த்தியாகச் செயந்த வர்ம பாண்டியனைப் புலிகேசி அங்கீகரிக்க வேண்டியது.

மேற்கண்டவாறு இரு தரப்புக்கும் திருப்திகரமான உடன்படிக்கையைச் செய்து கொண்ட பிறகு, செயந்த வர்ம பாண்டியன் புலிகேசியிடம் விடைபெற்றுக் கொண்டு கொள்ளிடத்துக்குத் தென் கரை போய்ச் சேர்ந்தான்.

நான்காம் அத்தியாயம்

வேங்கி தூதன்

செயந்த வர்மன் போய் விட்ட பிறகு, புலிகேசி தன்னுடைய பிரதானிகளைப் பார்த்து, "ஆனைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும் என்பது எவ்வளவு உண்மை, பார்த்தீர்களா? அந்த நரி மகேந்திரன் கோட்டைக்குள் ஒளிந்து கொள்ளப் போக, இந்தப் பூனைப் பாண்டியனின் தலை ஒரேயடியாய் வீங்கிப் போயிருக்கிறது! உத்தராபதத்தின் ஹர்ஷ வர்த்தன சக்கரவர்த்திக்கும், மத்திய தேசத்தின் வாதாபி சக்கரவர்த்திக்கும் இணையாக, இந்தப் பூனைப் பாண்டியனும் தக்ஷிண சக்கரவர்த்தியாக விளங்க வேண்டுமாம்! ஆசையைப் பாருங்கள், ஆசையை! காஞ்சிக் கோட்டை மட்டும் விழட்டும்; பிறகு இந்த அற்பனுக்கும் தக்க புத்தி புகட்டி விட்டுத்தான் நாம் வாதாபிக்குத் திரும்ப வேண்டும்" என்றான்.

இப்படிப் புலிகேசி சொல்லி முடிக்கும் தருவாயில், வேகமாகக் குதிரைகள் நெருங்கி வரும் சத்தம் கேட்டது. காஞ்சி முற்றுகையை நடத்திக் கொண்டிருந்த சளுக்க சேனாபதி அவசரச் செய்தியுடன் தூதர்களை அனுப்பியிருக்கிறார் என்றும், அவர்கள் வேங்கியிலிருந்து வந்த தூதன் ஒருவனையும் அழைத்து வந்திருப்பதாகவும் தெரிந்தது.



தாமதமின்றி அவர்களைத் தன் முன்னிலையில் அழைத்து வரும்படி புலிகேசி சொல்ல, சேனாபதி அனுப்பிய தூதர்களின் தலைவனும் வேங்கி தூதனும் கூடாரத்துக்குள் அழைத்து வரப்பட்டார்கள்.

வேங்கி தூதன் உடம்பெல்லாம் காயங்களுக்குக் கட்டுப் போட்டுக் கொண்டிருந்தான்.

தூதர்கள் இருவரும் சக்கரவர்த்திக்கு அடி பணிந்து எழுந்த பிறகு, சேனாபதியின் தூதன், "பிரபு! இவன் வேங்கியிலிருந்து முக்கியமான செய்தி அடங்கிய ஓலை கொண்டு வந்திருக்கிறான். காஞ்சிக்கு வரும் வழியில் இவனை வழிமறித்துச் சிலர் தடுக்க முயற்சித்தார்களாம். அவர்களுடன் சண்டையிட்டுத் தப்பித்துக் கொண்டு வந்தான். காஞ்சியிலிருந்து இங்கு வரும் மார்க்கத்தில் இவனுக்கு ஏதும் அபாயம் வரக்கூடாதென்பதற்காகச் சேனாதி

பதி என்னையும் வீரர்கள் எழுவரையும் அனுப்பினார்'' என்றான்.

பிறகு, வேங்கியிலிருந்து வந்த தூதன் தன் உடைவாளின் உறையில் பத்திரமாய் வைத்துக் கொண்டிருந்த ஓலையை எடுத்துப் பயபக்தியுடன் சக்கரவர்த்தியிடம் கொடுத்தான்.

புலிகேசி அதை வாங்கிச் சபையில் இருந்த லிகிதனின் முகத்தைப் பார்க்க அவன் ஓடி வந்து பணிவுடன் ஓலையை வாங்கிப் படிக்கலானான்:—

"திரிபுவன சக்கரவர்த்தி சத்யாச்ரய புலிகேசி மகாராஜாவுக்கு அன்புள்ள சகோதரன் விஷ்ணுவர்த்தனன் பக்தியுடன் எழுதும் லிகிதம்.

தாங்கள் காஞ்சி போய்ச் சேர்ந்த பிறகு எவ்விதச் செய்தியும் தங்களிடமிருந்து வரவில்லை. நான் பல முறை அனுப்பிய ஓலைகளுக்கும் மறுமொழி இல்லை. ஒரு வேளை என் ஓலைகள் தங்களுக்கு வந்து சேரவில்லையோ என்று சந்தேகிக்கிறேன்.

தங்களுடைய கட்டளைப்படி குரு பூஜ்ய பாதரை வரவழைத்து விமரிசையாக மகுடாபிஷேகம் செய்து கொண்டேன். ஆனால் இன்னும் தொல்லைகள் தீர்ந்தபாடில்லை. வேங்கிப் படைகள் இன்னும் பலைப் பிரதேசங்களில் மறைந்து நின்று தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கின்றன. குடி படைகளும் கருமுரு என்று இருக்கிறார்கள்.

இன்னும் ஒரு அதிசயமான விஷயம்: மகேந்திர பல்லவனுடைய சிறிய தந்தை மகன் புத்தவர்மன் எங்கிருந்தோ ஒரு பெரிய சைனியத்துடன் முளைத்திருக்கிறான். கிருஷ்ணா நதியின் தென் கரையில் தண்டு இறங்கி நான் தங்களுக்கு உதவி செய்வதற்காகப் புறப்பட்டால் என்னைத் தடுக்கப் பாவதாகக் கருவிக்கொண்டிருக்கிறானாம்.

இவ்வளவோடு, வேங்கி யுத்தத்தில் ஏற்பட்ட காயங்களால் நான் அடைந்த தேக அசௌக்யம் இன்னும் தீரவில்லை. நாளுக்கு நாள் பலவீனம் அதிகமாகி வருகிறது. குதிரை மேல் ஏறக்கூட முடியாதவனாயிருக்கிறேன்.

இதெல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம்: மகேந்திர பல்லவன் கோட்டைக்குள் ஒளிந்து கொள்வதற்கு முன்னால், உத்தராபதச் சக்கரவர்த்திக்கு உதவி கோரி ஓலை அனுப்பினானாம். ஹர்ஷ வர்த்தனர், தாங்கள் காஞ்சியிலும் நான் வேங்கியிலும் அகப்பட்டுக் கொண்டிருக்கும் இச் சமயம் பார்த்து, அசலபுரத்தின் மேலும் வாதாபியின் மேலும் படையெடுக்கத் தீர்மானித்து விட்ட



தாக வதந்தி உலாவுகிறது. கன்யா குப்ஜத்திலிருந்து சமீபத்தில் நாகார்ஜுன மலைக்கு வந்த ஒரு யாத்ரிகன் இவ்விதம் சொன்னானாம். அஜந்தா குகைகளையும் சித்திரங்களையும் பார்க்க வேண்டும் என்ற ஆசையினாலேயே ஹர்ஷவர்த்தனர் முக்கியமாக இந்த யோசனை செய்திருப்பதாய் வதந்தியாம்.

இப்பேர்ப்பட்ட நிலைமையில், அடியேனுக்குத் தாங்கள் என்ன கட்டளையிடுகிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள ஆவலாய்க் காத்திருக்கிறேன். எது எப்படியிருந்தாலும், 'படையுடன் கிளம்பி வா' என்று கட்டளையிட்டால், உடனே கிளம்பச் சித்தமாயிருக்கிறேன். என் அன்பார்ந்த தமையனும் தந்தையும் குருவும் அரசனும் உற்ற நண்பனுமான தங்களுடைய வார்த்தையே எனக்குக் கடவுளின் கட்டளையை விட மேலானது. என் உடல், பொருள், ஆவியனைத்தையும் தங்களுடைய சேவையில் அர்ப்பணம் செய்ய எந்த க்ஷணமும் சித்தமாயிருக்கிறேன்.

என் பேரில் ஏதாவது கோபம் இருந்தால், ஏதேனும் நான் பிசகு செய்திருந்தால், க்ஷமிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். இன்னும் வெகு காலம் சந்தேகத்திலும் குழப்பத்திலும் என்னை விட்டு வைக்காமல், 'இன்னது செய்' என்று திட்டமாக ஆக்ஞையிடும்படி மன்றாடுகிறேன்."

பெரும்பாலும் தமிழ்ச் சொற்களையும், சிற்சில பிராகிருத வார்த்தைகளையும் கொண்டு எழுதப்பட்டிருந்த மேற்படி லிகிதத்தைப் படித்து வந்த போது, ஆரம்பத்திலெல்லாம் புலிகேசியினுடைய கண்களிலே அனல் பறந்தது. மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட நாகப் பாம்புபோல அடிக்கடி பெருமூச்சு விட்டான். ஓலையின் கடைசிப் பகுதியைப் படித்தபோது, அவனுடைய கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகிற்று. "ஐயோ, தம்பி! விஷ்ணுவர்த்தனா! உன்னை மறுபடியும் எப்போது காணப் போகிறேன்!" என்று அலறினான்.

சபையில் வீற்றிருந்த தளபதிகள் பிரதானிகள் முதலியோர் யாரும் அவனுக்கு ஆறுதல் கூற முன்வரவில்லை. ஏதாவது பேசினால் என்ன விபரீதம் நேருமோ என்னவோ என்று அனைவரும் கதிகலங்கிக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று புலிகேசி புலம்புவதை நிறுத்தி விட்டு, கண்களைத் துடைத்துக்கொண்டு சிம்ம கர்ஜனைக் குரலில், "இந்தப் படையெடுப்புக்கு நாள் பார்த்துக் கொடுத்த ஜோஸ்யன் யார்? வாதாபியில் இருக்கிறானா? இங்கே நம்முடன் வந்திருக்கிறானா?" என்று கேட்டான்.

"வாதாபியில்தான் இருக்கிறான்" என்று பிரதானிகளில் ஒருவன் சொன்னான்.

"அப்படியானால் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். வாதாபிக்குப் போனதும் முதல் காரியமாக அந்த ஜோஸ்யனை யானையின் காலால் இடறச் சொல்ல வேண்டும்!" என்றான்.

அதே சமயத்தில், புலிகேசியின் கோபத்திற்கு இரையாவதற்காகவே கொண்டு வந்தது போல் ஒரு மனிதனை மேலெல்லாம் கயிற்றால் பிணைத்து, கூடாரத்துக்குள் கொண்டு வந்தார்கள். புலிகேசி வெருண்டு, "இவன் யார்? இவன் யார்?" என்று கர்ஜிக்க, காஞ்சியிலிருந்து வந்த தூதர் தலைவன், "பிரபு! இவன் காஞ்சி ஒற்றன்; நாங்கள் வரும்போது வழியிலே இவனைச் சந்தித்தோம். கட்டிப் பிடித்துக்கொண்டு வந்தோம்" என்றான்.

"ஆஹா! இந்தப் பாழாய்ப்போன பல்லவ ராஜ்யத்தில் ஒற்றர்களைத் தவிர வேறு யாருமே இல்லை போலிருக்கிறது. நல்லது; ஜோசியனுக்காக இவனை யானையின் காலால் இடறச் செய்யுங்கள்!" என்றான் புலிகேசி.

அத்தகைய கடுமையான ஆக்ஞைக்கு உள்ளான மனிதன் நமக்கு ஏற்கெனவே அறிமுகமானவன்தான். ஆனால், இப்போது அவன் பழைய முரட்டுப் பட்டிக் காட்டுக் குண்டோதரனாயில்லை. நாகரிகமாக உடையணிந்திருந்தான். வாதாபி சக்கரவர்த்தியின் மேற்படி ஆக்ஞையினால் அவன் அதிக மனக்கலக்கத்துக்கு உள்ளானவனாகத் தோன்றவில்லை!

பிரத்தி உபகாரம்

ஆர். வி. ராமன்

வேலனின் ஓட்டம் தடைப்பட்டது. அவனுடைய இருதயத் துடிப்பு நின்று விடும்போல் தோன்றியது. அவன் உடல் வியர்த்தது. ஏனென்றால், இதுவரை தலை மறைவாக இருந்து வந்த அவன் இன்று போலீஸ்காரன் கண்ணில் பட்டு விட்டான்.

எமகிங்கரன் போல் கறுத்த மீசையுடனும் நெருப்புப் பறக்கும் கண்களுடனும் போலீஸ்காரன் அவனைப் பார்த்து "ஏண்டா வேலா, இத்தனை நாள் எல்லோருக்கும் டுக்கா கொடுத்துண்டிருந்தாயே, எத்தனை நாளைக்கப்பா இப்படி ஏமாத்தலாம்? ஒரு நாளைக்கு அம்புட்டுக்கத்தானே வேணும்?" என்று கேலியாய்ச் சொன்னான் பிடித்த பிடியை விடாமல்.

"அண்ணே, இன்னிக்கு மட்டும் என்னை விட்டுடு. ஒரு பெண்பிள்ளை பிரசவவேதனைப் பட்டுண்டிருக்கா. அவ வீட்டிலே யாருமில்லே. அவ புருஷங்கிட்டே சொல்லிட்டு வந்துடறேன். வேணுமானால் வரபோது நீ இங்கேயிருந்தால் நான் வேலன்மேலே ஆணையாய் உங்கிட்ட வந்துடறேன்" என்றான் வேலன் தழுதழுத்த குரலில்.

திருடன் உண்மை சொல்லமாட்டான் என்ற தீர்மானங் கொண்ட போலீஸ் இலாகாவில் யார்தான் அவனை நம்புவார்கள்? அதே பாடத்தை நன்றாய்ப் படித்திருந்த தாணாக்காரன், "ஏண்டா, இந்தக் கதையெல்லாம் யார்கிட்டேடா சொல்றே? நடடா தாணாவுக்கு!" என்று வேலன் கையைப் பிடித்துக் கரகர வென்று இழுத்தான்.

"அண்ணே, சத்தியமாச் சொல்றேன். அந்தப் பொம்பளே வீட்டிலே எல்லாரும் வெளியே போயிட்டாங்க. பாவம், அந்த அம்மா தன்னந் தனியா துடிக்கிறாங்க" என்று வேலன் கண்ணீர் ஒழுகக் கதறினான்.

போலீஸ்காரனும் சற்றுத் தயங்கினான். வேலன் முகத்தைக் கண்ட அவனுக்கும் கொஞ்சம் இரக்கம் வந்ததோ என்னவோ, அவன் பிடித்த பிடியைச் சற்றுத் தளர்த்தினான். இதைத் தவறாக எண்ணிக் கொண்ட வேலன் ஓட எத்தனித்தான். அப் போலீஸ்காரன் மனம் மறுபடியும் கல்லாய் விட்டது. "ஏண்டா, திருட்டுக் கழுதே! ஓடவா பாக்கறே?" என்று அவன் கன்னத்தில் பளீரென்று அறைந்தான்.

வேலன் அடியைப் பொருட்படுத்தாமல் மீண்டும், "அண்ணே, இன்னோடு என் ஆயுசு முடிஞ்சாலும் பரவாயில்லே. அந்த அம்மா கஷ்டப்படறாங்க என்கிற சமாசாரத்தை அவ புருசங்கிட்டே சொல்லிட்டேனா அப்புறம் சந்தோஷமா சாகக்கூடத் தயார், அண்ணே!" என்றான். போலீஸ்காரன் கேட்கவில்லை. கையைப் பிடித்துக் கரகர வென்று இழுத்துக் கொண்டே போலீஸ் ஸ்டேஷனைப் பார்க்கச் சென்றான்.

ஸெண்ட்ரல் ஸ்டேஷனுக் கருகில் வந்ததும் அவர்கள் ரோட்டைக் கடக்க வேண்டியிருந்தது. சாயங்கால வேளை. ஜன நெருக்கம் அதிகமாக இருந்தது. வண்டிகளும் கார்களும் ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டேயிருந்தன. இதன் நடுவில் ஏதோ ஒரு ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. அதைச் சுற்றி ஒரு பெருத்த கூட்டம் சென்றது. தாணாக்காரன் அதைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவனையறியாமல் அவன் பிடி தளர்ந்தது. அதுதான் சமயமென்று கையை விடுவித்துக் கொண்டு வேலன் ஓட்டம் பிடித்தான்.

ஓடிக்கொண்டிருந்த வேலன் வழியில் ஒரு பிள்ளையார் கோவிலைக் கண்டான். தன் ஓட்டத்தை நிறுத்தி, பிள்ளையாரின் முன் நின்று, "என் அப்பனே, இந்த மட்டும் என்மேல் உனக்கு இரக்கம் வந்ததே! நான் போய்ச் சமாசாரத்தைச் சொல்லி, அவ புருசன் வீடு போய்ச் சேரும் வரை நீ அந்தப் பெண்ணுக்குத் துணையாயிருக்கணும். நான் உனக்கு இன்னிக்கு சாயந்திரம் ஒரு தேங்காய் உடைக்கிறேன்" என்று மிகவும் உருக்கமாக வேண்டிக் கொண்டான்.

கையெழுத்து மறையும் நேரம். வேலன் தான் சேரவேண்டிய இடத்துக்கு வந்து சேர்ந்தான். அது ஒரு போலீஸ்தாணா. உள்ளே சென்று நேரே

இன்ஸ்பெக்டரிடம் போனான். சிறிதும் அச்சமின்றி அவரைப் பார்த்து, "எசமான், இங்கே யாராவது ரத்தின சாமின்னு தாணுக்கார ஐயா இருக் காரா, நான் அவரை அவசரமாப் பார்க் கணும்" என்றான்.

"அவனை எதுக்கடா பார்க்கணும்? நீ யார்?" என்று அதட்டிய குரலுடன் ஹெட்கான்ஸ்டேபின் உள்ளே வந்தான்.

"அவர் சம்சாரம் வூட்டிலே ஒண்டியா யிருக்காங்க. அந்த அம்மா பிரசவ வேதனைப் படறாங்க. அவருகிட்டே சொல்லணும்னு வந்தேன்" என்றான் வேலன்.

"இப்போ வர மாட்டார். வந் தாச் சொல்றேன். நீ போடா!" என்று அதிகாரத்துடன் அவன் வேலனை வெளியே தள்ளினான்.

சிறிது நேரங் கழித்து, ரத்தினசாமி யும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தான். வேலனைப் பார்த்ததும் அவன் ஏக்கம் பறந்தோடி விட்டது. "திருட்டுப் பயலே, திமிறிக்கிட்டா ஓடினே? இப்போ எப்படித் திமிறுவே பார்க்க லாம்?" என்பதற்குள், இன்ஸ்பெக்டர் அவனை இடைமறித்து, "ரத்தினசாமி! அவனிருக்கட்டும்; நீ உடனே வீட் டிற்குப் போ. உன் மனைவி தன்னந் தனியாய்த் தவித்துக் கொண்டிருக்கிறா ளாம். போ, போ, சீக்கிரம்" என்று துரிதப்படுத்தினார்.

தன்னைப் பிடித்த போலீஸ்காரர் தான் தான் தேடி வந்த ஆசாமி என்று அறிந்த



"அடி அசடே! நம்ப குழந்தைகள் பிறந்ததும் மனுஷன் முகம்மாதிரிதான் இருக்கும். போகப் போக நம்ப முகம் மாதிரி ஆகிவிடும். இதற்குப்போய் என் னத்திற்காக இப்படி அழுகிறாய்?"

தும் வேலன் ஆச்சரியம் அடைந்தான் ரத்தினசாமிக்கும் தூக்கி வாரிப் போட் டது. அவனை இல்லான் என்று சொன் னால் வேலனை இன்ஸ்பெக்டர் கைது செய்து விடுவார் என்று அவனுக்குத் தோன்றியது. அப்படிச் செய்வது நன்றிகெட்ட செயலாகும் என்று உணர்ந்தான். சொல்லாவிட்டால் தன் கடமையைச் செய்வதில் தவறியதாக வும் எண்ணினான். ஈசுவரனே கதி என்று எண்ணியவனாய், "எசமான், இவன் தான் இத்தனை நாளாய் ஒளிஞ்சு கொண் டிருந்த வேலன்!" என்றான்.

"ஆ! வேலனா?" என்று துள்ளியெழுந் தார் இன்ஸ்பெக்டர். "சரி, வேலன் பிடி பட்டான்" என்று நினைத்தான் ரத்தின சாமி. இன்ஸ்பெக்டர் வேலனை நெருங் கினார். வேலனும் தன் நிலையை உணர்ந் தான். தயாராக விலங்கு மாட்டிக்கொள் ளத் தன் இரு கைகளையும் நீட்டினான். இன்ஸ்பெக்டர் தனை பிடுவதற்குப் பதி லாக வேலனைத் தட்டிக் கொடுத்து, "வேலா! போ, பிறர் கஷ்டம் கண்டு பொறுக்காத உன் உள்ளத்தை இனித் திருட்டு நினைப்பால் கெடுத் துக்கொள்ளாதே! நான் உன்னைக் கைது செய்ய வில்லை. உன் பேரி லிருக்கும் கேஸைத் தள்ளும்படி செய் கிறேன். இனியாவது நல்லவனென்று பெயரெடு" என்றார்.

இன்ஸ்பெக்டர் ரத்தினசாமியுடன் வேலனையும் அழைத்துக்கொண்டு உடனே தன் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு சென்றார். அந்தே நிமிஷத்தில் ரத்தினசாமி தன் மாமியார் வீடு போய்ச் சேர்ந்தான். வீட்டில் நுழைந்ததும் அப்பொழுதுதான் பிறந்த பிள்ளையின் அழுகுரல் கேட்டது. ஓடிப் போய் விசாரித்தான். அவன் மாமியார் ரத்தினசாமிக்கு ஆண் குழந்தை பிறந் திருக்கிறதென்ற நல்ல சமாசாரத்தைச் சொன்னாள். ரத்தினசாமி, தட்டில் வெற்றிலை பாக்கு, தேங்காய் வைத்து இன்ஸ்பெக்டரிடம் கொண்டு வந்து கொடுத்தான்.


"என்ன, ரத்தினசாமி! என்ன குழந்தை?" என்று கேட்டார் இன்ஸ் பெக்டர்.

"ஆண் குழந்தைங்க" என்றான் ரத்தினசாமி சந்தோஷம் தாங்க மாட்டாமல்.

"ரொப்ப சரி; அவனுக்கு வேலன் என்று பெயரிடு" என்று சொல்லிவிட்டு இன்ஸ்பெக்டர் சென்றார்.


"மாட்டேன்.
கட்டுப்பாட்டு விலைக்கு
மேல் கொடுக்க
மாட்டேன்"

சஞ்சயன் தூது



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

விராடனுடைய ராஜ்யத்தில் உபப்பிலாவிய நகரத்திலிருந்து பாண்டவர்கள் தங்களுடைய நண்பர்களாகிய அரசர்களுக்கெல்லாம் தூதர்களை அனுப்பிப் பெருஞ்சேனை திரட்டினார்கள். ஏழு அக்குரோணிகள் சேர்ந்தன. எதிர்க் கட்சியில் கௌரவர்களும் இவ்வாறே தங்கள் சேனையைத் திரட்டினார்கள். அவர்களுடைய படை பதினொரு அக்குரோணிகளாயிற்று.

ஒரு அக்குரோணி என்பது தற்காலத்தில் ஒரு 'டிவிஷன்' என்பதைப்போல் எல்லாவிதப் படைகளும் தகுந்த விகிதாசாரப்படி சேர்ந்து கூடிய ஒரு கணக்கு. ஒரு தேர், ஒரு யானை, மூன்று குதிரை, ஐந்து காலாட்கள் இந்த விகிதப்படி சேனை திரட்டுவது அந்தக் காலத்து ராணுவ முறை. ஒரு அக்குரோணியில் 21,870 தேர்கள் இருக்கும். இதை அனுசரித்து மற்ற அங்கங்களின் கணக்கு. இவைகளுடன் எல்லாவித ஆயுதங்களும் மற்ற யுத்த சாமக்கிரியைகளும் இருக்கும். இந்தக் காலத்து 'ஆர்மர் கார்'கள் செய்யும் வேலையை அந்தக் காலத்தில் தேர்கள் செய்தன. இக்காலத்திய யுத்தங்களில் டாங்கிகள் செய்யும் வேலையை அந்தக் காலத்தில் யானைகள் செய்து வந்தன.

• • •

துருபதன் அனுப்பிய புரோகிதர் திருதராஷ்டிரனிடம் போய் வழக்கப்படி முதலில் கேட்க வேண்டிய குசலப் பிரச்னைகள் தீர்ந்ததும் சபையில் பாண்டவர்களின் சார்பில் பேசலானார் :—

"அரசர்களுக்குரிய தருமம் அனாதியானது. உங்களுக்குத் தெரியாததல்ல. திருதராஷ்டிர ராஜனும் பாண்டு ராஜனும் விசித்திரவீரியனுடைய குமாரர்கள். பிதாவின் சொத்து இருவருக்கும் பொதுவானது. அப்படியிருக்கத் திருதராஷ்டிரனுடைய புத்திரர்கள் ராஜ்ய பதவியை அடைந்து பாண்டு புத்திரர்கள் அதை அடையாமல் இருக்கிறார்கள். இதற்கு என்ன நியாயம்? குரு வம்சத்தில் பிறந்த பாண்டுவின் குமாரர்கள் தாங்கள் பட்ட துன்பங்களையெல்லாம் மறந்துவிட்டுச் சமாதானத்தை விரும்புகிறார்கள். யுத்தம் உலகத்துக்கு நாசம் உண்டாக்கும் என்று அவர்கள் அந்த வழியை வெறுக்கிறார்கள். தர்மத்துக்கும் முன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கும் இசைய அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விடுங்கள். தாமதம் வேண்டாம்" என்றார்.

• • •

அதன் மேல் அறிவும் வீரமும் பொருந்திய பீஷ்மர் பேசினார். "தெய்வானுகூலத்தால் பாண்டவர்கள் க்ஷேமமாக இருக்கிறார்கள். பல அரசர்களுடைய சகாயத்தை அவர்கள் பெற்றுப் பலசாலிகளாயிருந்த போதிலும் போர் புரிவதில் அவர்கள் மனம் செலுத்தவில்லை. சமாதானத்தையே கோருகிறார்கள். அவர்களுடைய சொத்தை அவர்களுக்குக் கொடுத்து விடுவதே தருமம்" என்றார்.

இவ்வாறு பீஷ்மர் பேசியதும் கர்ணன் கோபம் கொண்டவனாய் அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே, தூதரைப் பார்த்து, "பிராமணரே! நீர் சொல்வதில் என்ன புது விஷயம் இருக்கிறது? பழைய கதையைச் சொல்லுவதில் என்ன பயன்? ஆட்டத்தில் யுதிஷ்டிரன் இழந்த சொத்தை இப்போது அவன் எவ்வாறு கேட்கலாம்? யுதிஷ்டிரன் தன்னுடைய பிரதிக்ஞையைச் சரியாக நிறைவேற்றிவிட்டு எதையேனும் யாசகமாகக் கேட்கட்டும். மத்ஸ்ய தேசத்து அரசனுடைய சேனையையும் பாஞ்சால ராஜனுடைய பலத்தையும் நம்பியல்லவோ இப்போது ராஜ்யம் கேட்கிறான்? பயமுறுத்தித் துரியோதனனிடமிருந்து எதையும் பெற முடியாது என்பதை அறிந்து கொள்ளும். பதின்மூன்றாம் ஆண்டு முடிவதற்குள் பிரதிக்ஞை தவறிவிட்டபடியால் அவர்கள் மறுபடி பன்னிரண்டு வருஷங்கள் காட்டிலிருந்து விட்டுத் திரும்ப வேண்டியது" என்றான்.

பீஷ்மர்: "ராதேயனே! பயனற்ற பேச்சுப் பேசுகிறாய். இந்தத் தூதர் சொன்னபடி நாம் செய்யாமற்போனால் யுத்தத்தில் தோல்வியடைந்து துரியோதனனும் எல்லாரும் வீழ்த்தப்பட்டு மடிந்து போவது நிச்சயம்."

சபையில் ஏற்பட்ட கலவரத்தைப் பார்த்து, திருதராஷ்டிரன் குறுக்கிட்டான்.

"உலக நன்மையைக் கருதியும் பாண்டவர்களுடைய நலனைக் கருதியும் பாண்டவர்களிடம் சஞ்சயனை அனுப்புவதென்று நான் தீர்மானித்திருக்கிறேன். தூதரே! நீர் உடனே திரும்பிப் போய் இதை யுதிஷ்டிரனிடம் சொல்ல வேண்டும்" என்று திருதராஷ்டிரன் சொன்னான்.

இவ்வாறு தூதருக்குச் சொல்லி விட்டு, திருதராஷ்டிரன் சஞ்சயனை அழைத்து அவனுக்குக் கட்டளை யிட்டான்:—

"சஞ்சயனே! நீ பாண்டு புத்திரர்களிடம் போய், கிருஷ்ணன், சாத்யகி, விராடன் முதலியவர்களை நான் அன்புடன் விசாரித்ததாக நல்ல வார்த்தைகளைச் சொல். அவ்விடம் கூடியிருக்கும் அரசர்களுக்கெல்லாம் என்னுடைய வினயத்தைச் சொல். யாருக்கும் கோபம் உண்டாகாதவாறு யுத்தத்தைத் தவிர்க்கும் முறையில் எனக்காக நீ போய்ப் பேசுவாய்" என்றான். இந்த யோசனையை ஒப்புக்கொண்டு சபை முடிந்தது.

• • •

சஞ்சயன் யுதிஷ்டிரனிடம் சென்றான். உபப்பிலாவ்யத்தில் அனைவரையும் முறைப்படி வணங்கி விட்டுச் சபையில் நின்று சஞ்சயன் சொன்னான்:

"தருமபுத்திரரே! மறுபடி உம்மை நான் என் கண்ணால் பார்த்தது என் பாக்கியம். அரசர்கள் சூழ இந்திரனைப் போல் காட்சி தருகிறீர். இந்தக் காட்சி என் உள்ளத்துக்கு ஆனந்தமாக இருக்கிறது. திருதராஷ்டிர மகாராஜா உம்முடைய க்ஷேமத்தை விசாரிக்கிறான். அந்த அம்பிகா புத்திரன் யுத்தம் என்கிற பேச்சை வெறுக்கிறான். சிநேகத்தை விரும்புகிறான். சமாதானத்துக்காகவே ஆசைப் படுகிறான்" என்றான்.

இவ்வாறு சஞ்சயன் சொன்னதைக் கேட்டுத் தரும புத்திரன் மகிழ்ச்சியடைந்து, "அப்படியாயின், திருதராஷ்டிரருடைய மக்கள் பிழைத்தார்கள். நாம் அனைவரும் பெரும் துக்கத்திலிருந்து தப்பினோம். நானும் சமாதானமே விரும்புகிறேன். எனக்கு யுத்தம் வேண்டாம். எங்களுடைய ராஜ்யத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டால் பட்ட துன்பங்களை யெல்லாம் மறப்போம்" என்றான்.

சஞ்சயன் "திருதராஷ்டிர புத்திரர்கள் மூடர்கள். பிதாவின் பேச்சையும் பிதாமகர் பீஷ்மர் பேச்சையும் அவர்கள் தள்ளி விட்டு மூர்க்கர்களாகவே நடந்து கொண்டு வருகிறார்கள். ஆனாலும் நீர் பொறுமை இழக்கலாகாது. யுதிஷ்டிரரே! நீர் எப்போதும் உயர்ந்த தருமத்தில் நிற்கிறவர். யுத்தம் வேண்டாம். யுத்தத்தினால் அடைந்த செல்வத்தைக் கொண்டு என்ன சுகம் பெற முடியும்? பந்துக்களைக் கொன்று அடையக்கூடிய ராஜ்யத்தினால் என்ன நன்மையைப் பெற முடியும்? ஆகையால் போரைத் துவக்க வேண்டாம். சமுத்திரத்தை எல்லையாகக் கொண்ட ராஜ்யத்தை அடைந்தாலும் முதுமையும் மரணமும் யாராலும் விலக்க முடியாது. துரியோதனாதிகள் மூடர்கள். அதற்காக நீர் உம்முடைய தருமத்தையும் பொறுமையையும் இழக்கலாகாது. அவர்கள்



உங்களுக்கு ராஜ்யத்தைத் தராவிட்டாலும் மேலான தரும நெறியை நீர் விட்டு விலகலாகாது" என்றான்.

இவ்வாறு சஞ்சயன் சொல்ல யுதிஷ்டிரன் "சஞ்சயனே! நீ சொல்லுவது உண்மையாக இருக்கலாம். தருமமே சிறந்த பொருள். ஆனால் நாம் அதருமத்தில் இறங்குகிறோம்? கிருஷ்ணனுக்குத் தருமத்தின் ரகசியம் தெரியும். இரு பக்கத்தாரின் நலனையும் விரும்பும் வாசுதேவன் எவ்வாறு சொல்லுகிறானோ அவ்வாறு நான் செய்வேன்" என்றான்.

கிருஷ்ணன் "நான் பாண்டவர்களுடைய க்ஷேமத்தை விரும்புகிறேன். பல புத்திரர்களைப் படைத்திருக்கும் திருதராஷ்டிரனும் சுகமாக இருக்க வேண்டும் என்பதும் என் எண்ணம். இது சிக்கலான விஷயம். நானே ஹஸ்தினாபுரம் சென்று இதைத் தீர்க்கலாம் என்று எண்ணுகிறேன். பாண்டவர்களுடைய நன்மைக்கு யாதொரு குந்தகமும் இல்லாமல் கௌரவர்களிடம் சமாதானம் பெற முடியுமானால் அதையே செய்ய விரும்புகிறேன். அவ்வாறு செய்து தீர்த்தேனானால் கௌரவர்கள் யமனிடமிருந்து தப்புவார்கள். நானும் மிகப் பெரிய புண்ய காரியம் செய்தவனாவேன். சமாதானம் ஏற்பட்டால் பாண்டவர்கள் திருதராஷ்டிரனுக்குப் பணியாட்களைப் போல் சேவை செய்வார்கள். அதையே அவர்களும் விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் யுத்தத்துக்கும் தயாராகவே இருக்கிறார்கள். இந்த இரண்டு முடிவுகளில் திருதராஷ்டிர ராஜன் எதை விரும்புகிறானோ அதை அவன் அடையலாம்" என்றான்.

யுதிஷ்டிரன் சஞ்சயனைப் பார்த்து, "சஞ்சயனே! கௌரவர்களுடைய சபைக்குச் சென்று மகாராஜனுன அம்பிகா புத்திரனிடம் இவ்வாறு எனக்காகச் சொல்வீர்: 'உம்முடைய பெருந்தன்மையால் அல்லவோ சிறுவர்களாகிய நாங்கள் ஆதியில் ராஜ்ய பதவியை அடைந்தோம்? ஒரு சமயத்தில் என்னை அரசனாகச் செய்வித்த நீர் இப்போது எங்களை உபேட்சித்து நாடின்றி ஊரின்றி மற்றவர்களை அண்டிப் பிழைக்கும்படி செய்ய வேண்டாம். எங்கள் அன்புக்குரிய அப்பனே! இரு பக்கத்தவர்களும் பிழைக்க விசால பூமி இருக்க, விரோதம் செய்து கொள்ள வேண்டாம்.' இவ்வாறு எனக்காக திருதராஷ்டிரனை நீ வேண்டிக் கொள்ள வேண்டும். பிதாமகரை எனக்காக நமஸ்கரித்து, 'உம்முடைய பேரக் குழந்தைகள் எல்லாரும் அன்போடு வாழ்ந்து பிழைப்பதற்கு வழி தேடுவீராக' என்று அவரையும் கேட்டுக் கொள்ளும். அவ்வாறே விதுரருக்கும் சொல்வீர். அவரே நம்முடைய குலத்தின் முழு ஹிதத்தையும் அறிந்து சொல்லக் கூடியவர். துரியோதனனைச் சமாதானப்படுத்தி அவனுக்கும் என் சார்பில் சொல்லும்: 'அன்புக்குரிய தம்பியே! ராஜகுமாரர்களாகிய எங்களைத் தோல் ஆடை உடுத்தி வனத்தில் வசிக்கச் செய்தாய். எங்கள் தாய் அலற எங்கள் மனைவியை ராஜ சபையில் துன்புறுத்தினாய். இதையெல்லாம் பொறுத்தோம். இப்போதாவது எங்களுடைய நியாயமான உரிமையை எங்களுக்குக் கொடுத்துவிடு. பிறருடைய சொத்துக்கு ஆசைப்படாதே. நாங்கள் ஐவர். ஐவர்களுக்கு ஐந்து கிராமங்களையாவது கொடுத்துச் சமாதானம் செய்து கொள். பாரதகுலர் இங்ஙனே, அனைவரும் இன்பமாக வாழ்வோம்!' இவ்வாறு துரியோதனனுக்குச் சொல். சஞ்சயனே! சமாதானத்துக்கும் யுத்தத்துக்கும் இரண்டுக்கும் நான் தயாராய் இருக்கிறேன்."

இவ்வாறு சஞ்சயன் யுதிஷ்டிரனால் சொல்லப்பட்டு, பிறகு, பாண்டவர்களிடமும் கேசவனிடமும் விடைபெற்றுக் கொண்டு ஹஸ்தினாபுரம் சென்றான்.

தர்ம சங்கடம்



ஒரு வக்கீல்:—என்ன ஸார் இது? தலைப்பாகை எப்படியோ மாறிப் போய் விடுகிறதே! என் தலைப்பாகை யாரிடம் இருக்கிறதென்று தெரியவில்லை.

மற்றொரு வக்கீல்:—என் தலைப்பாகையும் மாறிவிட்டது, ஸார். என்ன செய்கிறதென்று தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கிறேன்.



இந்தியத் தேயிலையில்

மிகச்சிறந்தது

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் வெள்ளை லேபில் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.



லிப்டன்ஸ்

வெள்ளை லேபில்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 84 W

ழிப் போக்கன்

அகிலன்



கொல்லிமலைச் சாரலில் விளைந்த இளஞ் சிறு மூங்கிலை, கோயமுத்தூர் வாசியான சோமுவுக்கு யார் புல்லாங்குழலாகச் செய்து கொடுத்தார்களோ தெரியாது. ஆனால், அது அந்தப் பையனுக்குக் கிடைத்ததிலிருந்து, அவனையும் அவன் குழலையும் தனித்தனியே பிரித்துப் பார்ப்பது சிரம சாத்தியமான காரியமாகி விட்டது.

ஒருநாள் சோமு கடைவீதியில் பாம்பாட்டி ஒருவன் மகுடி வாசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டான். அன்றிலிருந்து மகுடிக்குப் பிடித்தது சனியன்! இதே பைத்தியமாய் இருந்து ஒரு வாரத்தில் மகுடியைத் தன் குழலில் சாதகம் செய்து கொண்டான்.

அதன்பிறகு, எப்போதெல்லாம் அவனுக்குத் தலைகால் புரியாத சந்தோஷம் வந்து விடுகிறதோ அப்போதெல்லாம் அவனிடம் நிச்சயம் மகுடியை எதிர்பார்க்கலாம்.

சோமுவுக்கு இப்போது பத்தொன்பது வயது. அவனுக்குத் தாய் தகப்பனார் கிடையாது. நாலுபேர் தமையன்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் சோமுவின் மீது அளவுகடந்த பிரியம். என்ன இருந்தாலும் கடைசித் தம்பியல்லவா?

என்னதான் அவர்கள் சோமுவின்மீது பற்றுதலாயிருந்தாலும், அவனுக்கென்னவோ அது ஒன்றும் லட்சியமாகத் தோன்றவில்லை. இருந்தாற்போலிருந்து, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டுக் கிளம்பி விடுவான். மறுபடியும் அவனை வீடு கொண்டுசேர்ப்பதற்குள் அவன் தமையன்மார்களுக்குப் போதும் போதுமென்றாகிவிடும்.

நாலைந்து தரம் இப்படி அவனால் கஷ்டப்பட்ட அவன் சகோதரர்கள், கடைசியில் மனமுடைந்து அவன் போக்கிலேயே போகட்டும் என்று விட்டு விட்டார்கள்.

2

சோமு வீட்டை விட்டுக் கிளம்புவது இத்துடன் ஆறாவது முறை. அவன் அப்படிக் கிளம்பி ஆறு மாத மாகிறது.

கரூரிலிருந்து திருச்சி வரும் ரஸ்தாவில், நெருப்பாகத் தகிக்கும் சித்திரை வெய்யிலைக் கொஞ்சங்கூடச் சட்டை செய்யாமல் அவன் சாலையைக் கடந்து வந்தான். அவனுடைய நினைவெல்லாம் தன் இதழ்களிலிருந்து பெருகிக் கொண்டிருந்த மகுடியில்தான் லயித்துப் போயிருந்தது.

ரஸ்தா வடக்கே திரும்பி வளைந்து செல்லும் மூலைக்கு வந்தவுடன் சோமுவின் வாசிப்பு திடீரென்று தடைப்பட்டது. சற்று தூரத்தில் எழுந்த கூக்குரலை உற்றுக் கேட்டான். அத்துடன் ரஸ்தாவை ஒட்டினாற்போல் மரக்கூட்டத்திற்கு மேலே குபீரென்று புகை எழும்புவதையும் பார்த்தான்.

“யார் வீட்டிலோ நெருப்புப் பிடித்துக் கொண்டது போலிருக்கிறது...... இதற்குத்தானா இவ்வளவு கூச்சல்! அருமையாக

வந்து கொண்டிருந்த என் வாலிப்பைக் கெடுத்து விட்டார்களே!" என்று முணுமுணுத்துக் கொண்டு புல்லாக்குழலை இடுப்பில் செருகினான். அவனுடைய காதுகளில் பக்கத்தில் நின்று துடி துடித்த ஒரு பெண் பிள்ளையின் வார்த்தைகள் விழுந்தன.

அவளுக்கு வயது நாற்பதிருக்கும். அவள் பெயர் அலமேலு என்று சோமு பின்னால் தெரிந்து கொண்டான்.

"ஐயோ! மங்களம் காச்சலோட மாடியில் கிடக்கிறாளே! இங்கே யாரும் ஆண் பிள்ளை இல்லையா?......அட தெய்வமே! இதோ நான் போகிறேன் அவளைத் தூக்குவதற்கு" என்று ஆவேசத்தோடு எரியும் வீட்டில் நுழையப் போனாள் அவள்.

"ஆண்பிள்ளை இல்லையா என்கிறாளே, என்னை இவளுக்கு ஆண்பிள்ளையாகத் தெரியவில்லையா!"—சோமுவுக்கு ரோஷம் குமுறிக் கொண்டு வந்தது.

"இதோ, நான் போகிறேன்" என்று அவளைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டு, அந்த வீட்டிற்குள் பாய்ந்தான்.

மாடிப்படியைத் தேடிப் பிடித்து, மேலே ஜுரத்தோடு படுத்திருந்த அந்தப் பெண் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வெளியே வருவதற்குள் சோமுவுக்குப் பாதி உயிர் போய்விட்டது. அவளைக் கொண்டு வந்து தரையில் போட்டுவிட்டுத் தானும் மூர்ச்சையாய் விழுந்தான்.

அவனுக்குச் சுய நினைவு வந்தபோது அந்த மாடியில் பற்றிக்கொண்ட தீ முழுதும் அணைக்கப்பட்டு விட்டது. அவனை வேறொரு கடை வீட்டின் திண்ணையில் படுக்க வைத்திருந்தார்கள். அவனுக்குப் பக்கத்திலேயே திண்ணையின் மற்றொரு கோடியில் அந்தச் சிறுமியும் படுத்திருந்தாள். சோமு மெதுவாகத் திரும்பி அந்தப் பக்கம் நோக்கிய போது அவளும் இவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சோமுவின் மயக்கம் முழுதும் தெளிந்து விட்டது. துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு அவன் புறப்படச் சித்தமானான்.

"இரு, தம்பி! சாப்பிட்டு விட்டுப்போகலாம்" என்று அவனை இருக்கச் செய்தாள். அவனுக்குச் சாப்பாடு போடும்போது அவனைப்பற்றி முழு விபரமும் கேட்டுத் தெரிந்து கொண்டாள் சிறுமியின் தாயார்.

"எப்போதும் இங்கேயே இருந்துவிடு தம்பி!" என்றாள் அவள்.

"ஊஹூம்" என்று தலையை ஆட்டினான் சோமு.

"ஏன்?"

"நான்தான் ஒரே இடத்தில் தங்கியிருப்பதில்லையே!"

"எவ்வளவு நாள் உனக்கு இங்கே இருக்கப் பிரியமோ அவ்வளவு நாள் இரு."

சோமு யோசித்துவிட்டு, "சரி, இருக்கிறேன்" என்று சொல்லி வைத்தான்.

3

வைகாசி மாத ஆரம்பம். அலமேலுவின் புஞ்சைக் காட்டில் அப்போது குடியானவர்கள் சோளக்கதிர் கொய்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அருகே, வரப்பின்மேல் அலமேலு மங்களத்துடன் நின்று கொண்டிருந்தாள். பக்கத்திலிருந்த ஏரிக்கரைச் சோலையிலிருந்து சோமுவின் மதுரமான குழலோசை கிளம்பிக் கொண்டிருந்தது.

சோமு அந்தச் சோலையில், ஒரே இரத்தச் சிவப்பாய்ப் பூத்துக் குலுங்கி நிற்கும் புரச மரம் ஒன்றின் உச்சிக் கிளையில் உல்லாசமாக உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுடைய குழலும் அப்போது மகுடியைத்தான் கொட்டிக் கொண்டிருந்தது!

"நானுந்தான் இந்தப் பிள்ளைக்கு எத்தனையோ தடவை சொல்லிவிட்டேன். மகுடி வாசிக்காதே, பாம்பு வரும் என்று. ஆனால், கேட்டால்தானே? சாப்பாடுகூட வேண்டாம் போலிருக்கிறது இந்தக் குழாய் கையிலிருந்து விட்டால்!" என்று அங்கிருப்பவர்களிடம் சொல்லி அங்கலாய்த்துக் கொண்டாள் அலமேலு.

தன் தாய் இப்படிச் சொன்னவுடன் மங்களத்திற்கு அங்கே இருப்புக் கொள்ளவில்லை. ஓடோடியும் வரப்புக்களின் வழியாய் ஏரிக்கரைக்கு வந்து, சோமு உட்கார்ந்திருந்த மரக்கிளையைத் தேடலானாள்.

மேலே, மரத்திலிருந்து அவளுடைய தலைக்கு நேராகச் சோமுவால் பிய்த்தெறியப்பட்ட பூக்கொத்து அவனுடைய இருப்பிடத்தை அறிவித்தது.

"சோமு மாமா, இதோ பாரேன்! மகுடி வாசிக்காதே; பாம்பு வருமாம்! நான் சொல்வதைக் கேள், மாமா!" என்று உரக்கக் கத்தினாள் மங்களம்.

"இல்லை, மங்களம்! நானும் இத்தனை நாளாய் வாசிக்கிறேன்; ஒரு பாம்புகூட வந்ததில்லை. அப்படி வந்தால்தான் நல்லதாச்சே!" என்று பதில் கொடுத்து விட்டு மறுபடியும் வாசிப்பதற்காக இதழருகில் கொண்டு போனான்.

மரத்தடியில் உட்கார்ந்து "ஓ" வென்று அழத் தொடங்கினாள் மங்களம். கண்ணீர் குபு குபுவெனப் பாய்ந்தோடியது.

"இதேதடா தர்ம சங்கடம்!" என்று நினைத்துக் கொண்டு மரத்தை விட்டுத் துரிதமாகக் கீழே இறங்கி அவளிடம் வந்தான் சோமு.

"அழாதே மங்களம், இதோ நிறுத்தி விட்டேன்" என்றான் தாழ்ந்த குரலில்.

"இனிமேல் மகுடியே வாசிக்கக் கூடாது தெரியுமா?" என்றாள் மங்களம் கண்டிப்பாக.

சோமுவின் சுபாவம் திரும்பி விட்டது. "அதுதான் முடியாது!" என்றான் அழுத்தமாக.

"இல்லா விட்டால் அழுவேன்!"

சோமுவுக்கு இதற்கென்ன பதில் சொல்லுவதென்று புரியவில்லை.

"அழுவேன் என்கிறாளே என்ன செய்வது? அழுகைக்குப் பயந்து கொண்டு மகுடியை விட்டுவிடுவதா? மகுடிக்கு ஆசைப்பட்டு மங்களத்தின் மனத்தைப் புண்படுத்துவதா?.........அது சரி, இவர்களுக்குள் எது உயர்ந்தது? மகுடியா? மங்களமா? ...... இரண்டுந்தான் உயர்ந்தது!"

4

வருடங்கள் சென்றன. மங்களம் அழகே உருவாய்த் திகழ்ந்தாள்.

ஒருநாள் இரவு, காளியம்மன் கோவிலுக்கு எதிரே நடந்து கொண்டிருந்த அரிச்சந்திர நாடகத்திற்கு அலமேலுவும், சோமுவும் போயிருந்தார்கள். மங்களம் மாத்திரம் தன்னந் தனியாக வீட்டில் இருந்தாள்.

சோமுவுக்கு நாடகம் சுவாரஸ்யமாயில்லை. பாதியில் எழுந்து வீட்டிற்கு வந்து விட்டான். வந்தவன் நேரே மாடிக்குச் சென்று படுக்கையில் படுக்காமல், சற்று நேரம் வானவெளியைப் பார்த்த வண்ணம் மாடியின் கைப்பிடிச் சுவருகில் நின்று கொண்டிருந்தான்.

நிலவு பாலைப் பொழிந்து கொண்டிருந்தது. அந் நிலவொளியில் அவனுள்ளத்தில் என்னென்னவோ இன்பக் கற்பனைகள் ஊற்றெடுத்தன. இடுப்பில் இருந்த குழலை எடுத்துத் துடைத்துக் கொண்டே வாசிப்பதற்காகக் கட்டைச் சுவரில் சாய்ந்தான்.

"மாமா ...!"

மங்களத்தின் மெல்லிய குரல் வீணையின் நாதம் போல் காற்றில் மிதந்து வந்தது.

ஆச்சரியத்தோடு குரல் வரும் திக்கைக் கவனித்தான். அப்போதுதான் மங்களம் மாடிப்படிகளிலிருந்து மேல் தளத்திற்கு வந்து கொண்டிருந்தாள்.

"நாடகத்திலிருந்து ஏன் மாமா பாதியில் வந்து விட்டாய்?" என்றாள்.

"பிடிக்க வில்லை; வந்து விட்டேன்" என்றான் சோமு.

"மாமாவுக்குப் பிடிக்கா விட்டால் அம்மாவுக்கு நிச்சயம் பிடிக்கும். நாடகம் முடிந்த பின்தான் வருவாள்" என்றாள் மங்களம்.

இப்படிச் சொல்லிக் கொண்டே அவளும் அவன் சமீபத்தில் வந்து வானத்தை நோக்கினாள்.



"நாடகத்தை விட எனக்கு இந்த நிலாதான் அதிகம் பிடிக்கிறது" என்றான் சோமு.

மங்களம் பெருமூச்சு விட்டாள். சற்று நேரம் கழித்து, "எனக்கும் அப்படித்தான்!" என்றாள்.

வெண்ணிலவின் அழகிய அமைதியில் இரு இதயங்களும் கட்டற்றுத் துடித்தன. அத் துடிப்பின் சுமையை மங்களத்தால் அவ்வளவாகத் தாங்க முடியவில்லை.

"எங்கே மாமா, குழலை எடுத்துக் கொஞ்

"சம் மருடி வாசி!" என்றாள். அவள் குரல் அவனைக் கெஞ்சுவதுபோலிருந்தது.

சோமுவுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.—மருடி வாசிக்க வேண்டா மென்று மன்றாடிய அதே மங்களந்தானா இப்போது இப்படிச் சொல்கிறாள்!

சோமுவின் இதழ்கள் வேய்ங் குழலை முத்தம் இட்டுக் கொஞ்சின. மங்களத்து வீட்டின் கூரை வேய்ந்த மாடியிலிருந்து மருடி நாத வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தது.

கந்தர்வ லோகத்திற்குத் தாவிக் கொண்டிருந்த சோமுவை மங்களம் திடீரென்று ஏறிட்டுப் பார்த்தாள். நிர்மலமான வான வெளியை அவன் கண்கள் வருடிக் கொண்டிருந்தன. கண்களிலிருந்து கண்ணீரும் இதழ்களிலிருந்து மருடியும் ஒன்றாய்ப் பெருகிக் கொண்டிருந்தன.

"மாமா......" எனத் தடுமாறினாள் மங்களம்.

"மங்களம்......"

குழலோசை தடைப் பட்டது. சோமுவின் மார்பு பொங்கி வடிந்தது.

வானத்து நிலவைச் சிறு மேகம் விழுங்கியது. வசந்த காலத் தென்றல் வேகமாக உள்ளே பாய்ந்தது.

விம்மிக் கொண்டே எழுந்து, முகத்தை மூடிய வண்ணம் திடுதிடுவென்று மாடிப்படி வழியாகக் கீழே ஓடினாள் மங்களம். பெருமூச்சுடன் குழலுக்கு அதன் இருப்பிடத்தைத் தேடிக் கொடுத்தான் சோமு.

5

அன்றைக்கு இரவே சோமு ஒரு கனவு கண்டான். பயங்கரக் கனவு. மங்களம் மாடியிலிருந்தவாறே சோமுவின் கரத்திலிருந்த குழலைப் பறித்துக் கொண்டு ஓடினாள். சோமு அவளைப் பிடிப்பதற்காகத் தொடர்ந்து பின்பற்றினான். கலீர் என்று சிரித்து விட்டு மங்களம் மாடியிலிருந்து கீழே விழுந்து உயிரை விட்டாள். அவளுடனேயே தன் கரத்திலிருந்த மூங்கிற் குழலும் உடைந்து விட்டது! சோமு தேசாந்திரம் புறப்பட்டு விட்டான்.

கனவு கலைந்து எழுந்தான் சோமு. படுக்கையில் தலையணை பூராவும் கண்ணீரால் நனைந்திருப்பதைக் கண்டுவிட்டு, தான் உண்மையிலேயே அழுதிருப்பதை உணர்ந்தான்.]

"கனவு கண்டால் பலிக்கு மென்று சொல்லுகிறார்களே! ஒரு வேளை அது உண்மையாகி விடுமோ?" என்னும் கவலை அவனைப் பற்றிக் கொண்டது. எவ்வளவோ தன்னைச் சமாதானம் செய்து கொள்ள முயன்றும் அது பயனற்று விட்டது.

ஆடி அமாவாசை. விளக்கு வைத்த சமயம். வயல் வரப்புகளில் சுற்றித் திரிந்து விட்டு, வீட்டிற்குத் திரும்பினான் சோமு. வாசற் கதவு வழியாக உள்ளே நுழையப் போகும் சமயத்தில், வீட்டிற்குள் மங்களமும் அவள் தாயாரும் ஆத்திரத்துடன் பேசிக்கொண்டிருந்த சொற்கள் அவன் காதில் விழுந்தன.

"பைத்தியம்! சோமு மாமாவைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வாளாம்! என்ன அழுத்தம் உனக்கு! இன்னொரு தரம் இப்படிச் சொல்லாதே! கேட்பவர்கள் சிரிக்கப் போகிறார்கள்! உன் அம்மாவுடன் பிறந்த மாமனா கெட்டுப் போகிறான்? வெறும் ஒரு வழிப் போக்கன்......"

இதற்கு மேல் சோமுவுக்குக் காது கொடுத்துக் கேட்கப் பொறுக்க வில்லை. அவன் பாதத்திற்குக் கீழிருந்த பூமி பம்பரம் போல் சுழன்றது.

மங்களம் தன் தாயாருடன் தழு தழுத்த குரலில் எவ்வளவோ வாதாடிப் பார்த்தாள். இதெல்லாம் அவன் காதில் விழுந்து கொண்டுதானிருந்தது. ஆனால் அவன் நினைவு இதை யொன்றும் கவனியாமல் எங்கெங்கோ அலைந்தது.

வெளியே இருளை வெறித்துப் பார்த்தான். வான முகட்டிலே ஒரு மின்னல் தோன்றி, காரிருளில் 'வழிப் போக்கன்' என்று எழுதி, அழித்து, மறைந்தது. ஆடி மாதத்தின் ஆவேசக் காற்றும் அவனை அதே பெயரினால் அறை கூவி அழைத்தது.

புயலிலும் மழையிலும் அடிபட்ட பூங் கொடிபோல் கண்ணீரும் கம்பலையுமாய் நின்றுகொண்டிருந்த மங்களத்தைத் திறந்த கதவின் வழியாக நோக்கி விட்டுச் சத்தஞ் செய்யாமல் திரும்பினான். திருச்சிராப்பள்ளி சாலையில் அவன் கால்கள் நடந்தன.

தூரத்து இருளில் அவன் மறைந்தவுடன் அவனது குழலொலி தயங்கித் தயங்கி மெதுவாக எழுந்தது. கொஞ்ச நாழிகை சென்றவுடன் அதுவும் 'படீர்' என்று நின்றது.

மங்களத்தை மறந்து விட்டுப் போகும் வழிப்போக்கன் மருடியை மறப்பதற்காகக் குழலையும் உடைத்தெறிந்தான் போலும்!

முன்னேற்பாடு



மனைவி :—வீட்டிலே இவ்வளவு இடம் கிடக்கிற போது, எதற்காக இப்படி யெல்லாம் அவஸ்தைப் பட்டுக் கொண்டு தூங்குகிறீர்களாம்?

புருஷன் :—அடி அசடே! இதுகூட ஒரு கேள்வியா? நாளைக்கு நான் ரயிலில் போகிறே னல்லவா, அதற்குத் தான் பழக்கிக் கொள்கிறேன்!

கவியின் கனவு

சாவி

கொஞ்ச நாட்களாகத் தமிழ்க் கவிஞர்களுக்கு அடிக்கும் யோகத்தையும் அவர்களுக்காக நடந்து வரும் பண வசூலையும் பார்த்து விட்டுத்தானோ என்னவோ, நாகப்பட்டணத்திலும் ஒரு புதுக் கவி தோன்றியிருக்கிறார். சென்ற அறுபது தினங்களாக மேற்படி நாகப்பட்டணம் கவிக்கும் நல்ல பண வசூல் நடந்து கொண்டுதானிருக்கிறது. நேயர்கள் யோசிக்க வேண்டாம். "இந்த நாகப்பட்டணம் கவிஞர் யார்? அப்படியானால் இந்தக் கவிஞருடைய நிதிக்கு எந்த விலாசத்துக்குப் பணம் அனுப்ப வேண்டும்?" என்று திக்கு முக்காடவும் வேண்டாம்.




சிறையில் கவிஞர்

நாகப்பட்டணம் கவிஞர் ஒரு சாதாரண நாடகமேடைக் கவிஞர்தான். மூன்று மணி நேரம்தான் மேடையில் தோன்றுவார். கவிகளைக் கவனம் செய்வார். சர்வாதிகாரி ராஜகுருவின் கோபத்துக்குப் பாத்திரமாவார். அதனால் தம்முடைய இரு குழந்தைகளான மணிவண்ணனையும், சாந்தியையும் பிரிந்து சிறைக்குச் செல்வார். சிறைக்குப் போய்க் குழந்தைகளைப் பிரிந்த துக்கத்தால் சாந்தியின்றி ஆடுவார், பாடுவார்; கண்களில் நீரைப் பெருக்குவார். "சாந்தி-சாந்தி" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கதறுவார். பின்னர் பயித்தியம் பிடித்துப் போய்த் தம்முடைய அபார நடிப்பினால் பார்ப்பவர்களைப் பதற அடிப்பார்.

இதெல்லாம், நான்கு மாதங்களுக்கு முன்பாக தினசரி ஆசிரியர் ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் ஆரம்பித்து வைத்த ஸ்ரீ சக்தி நாடக சபையின் "கவியின் கனவு" என்ற நாடகத்தில் வரும் காட்சிகளாகும். இந்த நாடகத்தின் காட்சி ஜோடனை, ஸ்டேஜ் அமைப்பு, சம்பாஷணை எல்லாவற்றிலும் புதுமையைக் காண்கிறோம்.

சாதாரணமாய், நாடக மேடைகளின் அகலம் இருபது அடிக்குமேல் இருப்பதில்லை. ஆனால் இந்தச் சபையார் நாற்பது அடி அகலத்தில் மேடையை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். திரைக்கு முன்பாக மேடையின் நடுவே, இரண்டு பெரிய தூண்களை நிறுத்தி அவற்றுக்கு ஓயாத வேலை கொடுக்கிறார்கள். ஒவ்வொரு காட்சியும் முடியும் போது அந்த இரு கம்பங்களையும் பக்க வாட்டில் இப்படியும் அப்படியும் ஆட்டி வைப்பதே ஒரு பெரிய காட்சியாயிருக்கிறது.

நாடகம் ஆரம்பமாகு முன் அடுத்த நாடகத்தின் ஒரு முக்கிய காட்சியை மாதிரிக் காட்சியாகக் காண்பிக்கிறார்கள். சினிமாக் கொட்டகைகளில்தான் அடுத்து வரும் படத்துக்கு 'ட்ரெயிலர்' காட்டுவது வழக்கம். அந்த முறையை முதல் முதலாக நாடக மேடையில் கொண்டு வந்த பெருமை இந்தச் சபைக்கே உரித்தாகும். இம்மாதிரி பல புதுமைகளைக் கையாண்டு "கவியின் கனவை" பிரமாத வெற்றியுடன் நடத்திக் காண்பிக்கிறார்கள்.



ராஜா வியாக்ரஸிம்மன்

நிற்க. "கவியின் கனவு" என்னும் நாடகம் இவ்வளவு சிறப்பாக



கிண்டா கர்ணன்

அமைந்ததற்கு மூன்று காரணங்கள் சேர்ந்து கொண்டிருக்கின்றன. முதலாவதாகக் கதையின் போக்கு தற்கால அரசியல் நிலைமையைப் பிரதி பலித்துக் காட்டுவதுடன், பாத்திரங்களின் சம்பாஷணை கவர்ச்சியும் உணர்ச்சியும் கொண்டதாயிருக்கிறது. இரண்டாவதாக ராஜகுருவும், கவியும் தங்களுடைய இயற்கையான நடிப்பினால் நாடகத்தை நாடகமாகச் செய்யாமல் பார்ப்பவர்கள் ஏதோ ஒரு நிஜ சம்பவத்தைத் தங்கள் கண் முன்பாகக் காண்பதைப் போன்ற பிரமையை உண்டாக்கிவிடுகிறார்கள். ராஜகுருவின் 'மேக்-அப்' முதல் தரம். கண்பார்வை பயங்கரம். கால் நடை அபாரம்! இந்த நாடகத்திலேயே நம்மை மிகவும் கவர்ந்து விடுவது ராஜகுரு, கவி இந்த இரண்டு பேர்களுடைய நடிப்புத்தான். அதிலும் ராஜகுருவாய் வருகிறவருடைய பயங்கரமான "மஹா காளி!" உச்சரிப்பும் அகம்பாவமான பேச்சுக்களும் நம்மை வெகுவாகக் கவர்ந்து விடுகின்றன. சர்வாதிகாரியின் தோற்றமும் உச்சரிப்பும் எத்தனைக் கெத்தனை பயங்கரமாயிருக்கின்றனவோ அத்தனைக் கத்தனை, கவியாக வருபவருடைய பேச்சில் விகாரமும், பார்வையில் இனிமையும், முகத்திலே சாந்தியும் நிலவுகிறது. அவர் பாடுகிற பாட்டோ நம்முடைய காதிலே ரீங்காரம் செய்கிறது.



வேலைக்காரக் கார்மேகம்

இப்படியே ஒவ்வொரு நடிகரும் அந்தந்தப் பாத்திரங்களின் குணாதிசயங்களை மனதில் கொண்டு திறம்பட நடித்து நாடகத்தைச் சோபிக்கச் செய்கின்றனர். நாடகத்தின் ஹாஸ்ய கதாபாத்திரங்களாய் வரும் விவசாயி, வேலைக்காரக் கார்மேகம், ராஜகுருவின் சிஷ்யன் கிண்டா கர்ணன் மூவரும் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு நடிக்கின்றனர். இராஜகுருவின் சிஷ்யனாக வரும் கிண்டா கர்ணன், பேச்சிலும் நடிப்பிலும் அசாத்திய யமகிண்டா கர்ணனாயிருக்கிறான்!

நாடகத்தின் சிறப்புக்கு மூன்றாவது காரணமாய் அமைந்திருப்பது அதில் வரும் "விதியை வெல்வோம் நாம்" என்ற ஒரே ஒரு பாட்டுத்தான். அந்தப் பாட்டைக் கவி முதல் முதலாகத் தம்முடைய ஆசிரமத்தில் கவனம் செய்து பாடுகிறார். அதே பாட்டுத்தான் நாடகத்தில் இரண்டு மூன்று இடங்களில் பாடப்படுகிறது. கடைசியில் கவியினுடைய பயித்தியம் தெளிவதற்கும் அதே பாட்டைத்தான் பாடவேண்டியிருக்கிறது. நாடகம் முடிந்ததும் கொட்டகையிலிருந்து எழுந்து போகிறவர்களும் அதே பாட்டைத்தான் பாடிக்கொண்டு போகிறார்கள்.

இதில் என்ன விசேஷம் என்றால், எந்த இடத்துக்கும், எந்த சந்தர்ப்பத்துக்கும் மேற்படி பாட்டு பொருத்தமாயமைந்திருப்பதுதான். நாடகத்தின் உயிர் நாடியாய் அமைந்துள்ள இந்தப் பாட்டுக்குச் சிறந்த வர்ணமெட்டை அமைத்து "இன்னும் ஒரு தடவை பாடமாட்டார்களா?" என்று கேட்கும்படியாய் அழகு செய்திருக்கிறார்கள்.



சர்வாதிகாரி ராஜகுரு

இத்தனை அழகான நாடகத்துக்கு 'அழகுக்கு அழகு செய்வதே போல்' ஸ்ரீ மாதவம் பிள்ளையின் சீன் ஜோடனைகள் வர்ண விசித்திரமான சித்திர வேலைப்பாடுகளுடன் வாய்ப்பாக அமைந்திருப்பது ஒரு பெரிய விசேஷமாகும். இதையெல்லாம் பார்த்த உள்ளூர் அமெச்சூர் நாடக சபைக்காரர்கள் இவ்வளவு சிறப்பாக நாடகக் கலைக்கு அருந்தொண்டு செய்து வரும் ஸ்ரீ சக்தி நாடக சபையின் சொந்தக்காரர் ஸ்ரீ டி. கே. கிருஷ்ணசாமிக்கு "நாடகக் கலா தாசர்" என்று பட்டம் வழங்கியிருப்பது மிகவும் பொருத்தமான காரியம்தான்.



தோட்டக்காரன்



ஒரு காட்டில் அண்ணன், தம்பியுமாக இரண்டு கரடிக் குட்டிகள் இருந்தன. ஒரு குட்டியின் பெயர் ராஜா; இன்னொரு குட்டியின் பெயர் சீமா. சீமா இரண்டாம் வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தது; ராஜா ஐந்தாம் வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தது. "நீங்கள் இருவரும் தினசரி விடியற் காலையில் எழுந்து படிக்க வேண்டும்" என்று அவற்றின் அப்பா உத்தரவிட்டிருந்தார். அப்பொழுது தான் படிக்கும் பாடமெல்லாம் குழந்தைகளின் மனதில் நன்றாய்ப் பதியும் என்பது அப்பாவின் எண்ணம்.

அதன்படி, ஒரு நாள் காலை வழக்கம் போல் சீமா எழுந்து படித்துக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு எழுந்த ராஜாவுக்கு அன்று படிக்க இஷ்டமில்லை. ஏனென்றால், அதன் கவனமெல்லாம் அன்று வேர்க்கடலைக் கொல்லை மேல் இருந்தது. விடியற் காலையில் சென்றால் தோட்டத்தில் யாரும் இருக்க மாட்டார்கள். இஷ்டம் போல் தின்று விட்டு வரலாமல்லவா?

ஆனால் அதற்குத் தனியே செல்வதற்குப் பயமாயிருந்தது. ஆகவே, விஷயத்தைச் சொல்லி, தம்பி சீமாவைத் துணைக்கு அழைத்தது. சீமா அதற்கு இணங்காமல் தன் பாட்டுக்குப் படித்துக் கொண்டிருந்தது. அதனால் ஆத்திரமடைந்த ராஜா, சீமாவின் பாடத்துக்கு எதிர்ப் பாடம் படிக்க ஆரம்பித்துவிட்டது. எப்படித் தெரியுமா?

"பசு மிகவும் சாதுவான பிராணி" என்று சீமா படித்தால், "அதன் வாலைப் பிடித்து இழுத்தால் தெரியும்!" என்றது ராஜா.

இப்படியே சீமா, "அதற்கு நான்கு கால்களும், ஒரு வாலும் உண்டு" என்றால், ராஜா, "இல்லாமல் எட்டு கால்களும் இரண்டு வால்களுமா இருக்கும்?" என்றது.

இந்த உபத்திரவத்தைச் சகிக்க முடியாமல், "அப்பா!" என்று இரைந்தது சீமா. அப்படி இரைந்த சீமா, உடனே எதையோ நினைத்துக் கொண்டு, "ஓஹோ! அதனால்தான் உன் அட்டகாசம் அதிகமாயிருக்கிறதோ?" என்றது.

"எதனால்தான்?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டது ராஜா.

"அப்பா ஏதோ காரியமாக ஊருக்குப் போயிருக்கிறாரல்லவா?"

"ஆமாம்; உனக்கு ஞாபகமில்லையா?"

"இருந்தால் இத்தனை நேரம் படித்துக் கொண்டிருப்பேனா? நீ அழைத்ததும் அழைக்காததுமாய் உடனே கிளம்பி விட்டிருக்க மாட்டேனா?" என்று சொல்லிக் கொண்டே சீமா படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைத்

தூக்கி எறிந்துவிட்டு தன் அண்ணுவுடன் கடலைக் கொல்லைக்குக் கிளம்பி விட்டது. வேர்க் கடலையை விடவா படிப்பு, பாடம் எல்லாம்?



விடியற்காலை இருட்டில் இரண்டும் வேர்க்கடலைக் கொல்லையை நோக்கி நடந்தன. "அடேய்! பொழுது விடிந்துவிட்டால் ஒன்றும் பிரயோஜனமில்லை. இந்த இருட்டிலேயே தோட்டத்திற்குள் புகுந்து வேலையை முடித்துக் கொள்ள வேண்டும்" என்று ஓட்டமும் நடையுமாக நடந்தது ராஜா. அதைப் பின்பற்றி சீமாவும் பரபரப்புடன் நடந்தது.

"அடேய்! சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு தோட்டத்திற்குள் நுழைய வேண்டும், தெரியுமா? எங்கேயாவது காவற்காரன் இருந்து நம்மைப் பிடித்து மரத்தில் கட்டி வெளுத்து வாங்கப் போகிறுன்!" என்று எச்சரித்தது சீமா.

"எல்லாம் எனக்குத் தெரியும் வாடா, பயங் கொள்ளி!" என்றது ராஜா.

இப்படிப் பேசிக் கொண்டே இரண்டும் கடலைக் கொல்லையை நெருங்கி விட்டன. ஆனுல், என்ன ஏமாற்றம்! அந்தனை இருட்டிலும் அங்கே தோட்டக்காரன் கையில தடியுடன் நின்று கொண்டிருந்தான்!

"அடேய், சீமா! எனக்கு ஒரு யோசனை தோணுதுடா! இதோ பார்! இந்த மரத்தின் மறைவில் ஒளிந்து கொண்டு, நாம் 'உர் உர் உர்' என்று உறுமுவோம்! அதைக் கேட்டு அந்தத் தோட்டக்காரன் பயந்து ஓடிப் போகலாமல்லவா?" என்றது ராஜா.

"சரியாய்ப் போச்சு! நல்ல யுக்திடா, உன் யுக்தி! அவனையும் அவன் தடியையும் பார்த்தால் நாம் அல்லவா ஓட வேண்டும் போலிருக்கிறது!"

"இப்படியே எவ்வளவு நேரந்தான் நின்று கொண்டிருப்பான்? எங்கேயாவது சிறிது நேரம் செல்ல மாட்டானு? பார்ப்போம்" என்று இரண்டு கரடிக்குட்டிகளும் அந்தத் தோட்டக்காரனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

இந்தக் கரடிக் குட்டிகளுக்காகப் பொழுது விடியாமலா இருக்கும்? கொஞ்சம் கொஞ்சமாக இருளெல்லாம் மறைந்து கொண்டே வந்தது. வெளிச்சம் தோன்றத் தோன்ற அந்தத் தோட்டக்காரன் நிஜத் தோட்டக்காரன் அல்ல; திருஷ்டிப் பரிகாரத்துக்காக வைத்திருந்த வைக்கோற் பொம்மை என்று தெரிந்தது!

அந்தப் பொம்மையைப் பார்த்த ராஜாவும் சீமாவும், "ஏ, பொம்மையே! நானைக்குக் கூடவா உன்னுல் எங்களை ஏமாற்ற முடியும்?" என்று சொல்லிக் கொண்டே தங்கள் வீட்டை நோக்கி ஓட்டம் எடுத்தன.

தஞ்சாவூர் தியாகப் பிரம்ம சபாவின் ஆதரவில் நடந்த சங்கீதப் போட்டியில் மாஸ்டர் சி. வி. கிட்டப்பா என்னும் இப் பன்னிரண்டு வயதுப் பையன் வெகு நன்ருகப் பாடி முதற் பரிசு பெற்றுன். விளையும் பயிர் முளையிலேயே தெரிகிறது போலும்!



நம் தேவைக்கு மிகக் குறைவாயுள்ளதில் ஒன்று

காகிதம்

எந்த முறையில் காகிதக் கட்டுப்பாடு (சிக்கனம்) கட்டளை முக்கிய தேவைகளுக்கு சப்ளையை நிச்சயமாகக் கிடைக்கச் செய்கிறது எப்படி?

இந்தக் கட்டுப்பாட்டினால் பொதுஜன உபயோகத்திற்கு கிடைக்கக்கூடிய காகித சப்ளையில் ஒரு பவுண்டுகூடக் குறையவில்லை. அல்லது சர்க்கார் உபயோகத்துக்கு அதிகப்படியான காகிதமும் ஒதுக்கி வைத்துக்கொள்ளப்படவில்லை.

1943-ல் உபயோகத்தில் 30 சதவிகிதம்தான் உபயோகிக்கலாம் என்ற இந்த உத்தரவு உபயோகிப்பவர்களுக்கு கடினமான சிக்கனத்தை ஏற்படுத்துகிறது. இருந்தபோதிலும் மிக முக்கியமான உபயோகமுள்ளவர்களுக்கு இந்த 30 சதவிகிதத்திலிருந்து சிறிது சலுகை கிடைக்கும். இது மாதிரியான அநேக சலுகைகளை ஏற்கனவே அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சிலவை யோசிக்கப்பட்டு வருகிறது. இந்த உத்தரவின் நோக்கம் முக்கியமில்லாத தேவைகளைக் குறைத்து, முக்கிய தேவைகளுக்கு அதிகம் கொடுப்பதுதான். பொதுஜன உபயோகங்களுக்கான ஸ்தாபனங்களான டிராம்வே கம்பெனி, பஸ்கள், எலெக்ட்ரிக் கம்பெனிகள் வாட்டர் ஒர்க்ஸ், அவசியமான பொருள்களை தயாரிப்பவர்கள், கல்வி ஸ்தாபனங்கள் போன்றவைகளுக்கு மிகக் குறைந்த அளவு தேவையான காகிதம் கிடைத்தாக வேண்டும். இது முக்கியமில்லாத தேவைகளின் உபயோகத்தில் கடினமான சிக்கனத்தை உண்டுபண்ணினால்தான் முடியும். இது தேசத்தின் நன்மையை முன்னிட்டு செய்யப்படுவதாகும். உங்களால் கூடுமான அளவு காகித சிக்கனம் செய்து அதிகாரிகளுடன் ஒத்துழையுங்கள்.

உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்.
காகிதத்தை மிச்சப் படுத்துங்கள்.



1. கார்பன் காப்பி எடுத்த பழைய காகிதங்களின் பின்புறங்களை உபயோகிப்பது.
2. முக்கியமில்லாத கடிதங்களுக்கு அதன் பின்புறத்திலேயே பதிலை எழுதி அனுப்பிவிடுவது.
3. மார்ஜினை ½ அங்குல அளவிற்கு குறைத்து விடுவது.
4. கூடுமானவரையில் சிறிய அளவு காகிதங்களையே உபயோகிப்பது.

காகித கட்டுப்பாடு கட்டளை 1944-ல் பிறப்பிக்கப்பட்டதின் காப்பிகள் பப்ளிகேஷன்ஸ் பிராஞ்சு, சிவில்லைன்ஸ், டில்லி அல்லது சர்க்கார் வெளியீடுகளை விற்கும் ஏஜண்டுகளிடம் ஒரு அணா விலைக்கு கிடைக்கும்.

நியூ டில்லி இண்டஸ்டிரீஸ் & சிவில் சப்ளை இலாகாவால் வெளியிடப்பட்டது.

AAA 1213 TM.

பாரதியார் ஞாபகார்த்த நிதி

யாழ்ப்பாணத் தமிழன்பர்கள், ("ஈழகேசரி" ஆசிரியர் மூலம்) ரூ. 808 9 5

திருநெல்வேலி தமிழ் இசைச் சங்கம் (செம்மை வைத்தியநாத பாகவதர் கச்சேரி வசூல் மூலம்) 800 0 0

ஸ்ரீ எஸ். கே. ராமனுஜம், திருநெல்வேலி (பேட்டை கச்சேரியின் பொருட்டு நன்கொடை) 501 0 0

திருச்சி அகில இந்திய புக் டிப்போ, கல்வி ஏஜன்டு, ஸ்ரீ வி. சுப்பிரமணியம் மூலம் 101 0 0

ஸ்ரீ ஏ. டி. பழனியப்ப முதலியார், திருக்கோவிலூர் 25 0 0

ஸ்ரீமதி ஏ. வி. மீனாக்ஷி, திருவொற்றியூர், சென்னை 15 0 0

ஸ்ரீ நாகலிங்கம், புதிய டெல்லி இன்ஷூரன்ஸ் கம்பெனி, மதுரை 11 0 0

ரூ. 10—0—0: ஸ்ரீ எஸ். கிருஷ்ணமூர்த்தி, எம். என். ஸி., நியூ டவுன் மெயின் ரோடு, ராஜன் & ராஜன் கம்பெனி, கல்வி ஏஜன்டு. திருப்பூர்: ஸ்ரீ எம். அருணாசல முதலியார், டைம் ஆப் இண்டியா ஏஜன்ட், வேலூர்: ரூ. 9—0—0: தூத்துக்குடி, எஸ். ஏ. வி. ஹைஸ்கூல், நான்காவது பாரம் மாணவர்கள், (ஸ்ரீ எம். ராஜேந்திரன் மூலம்); ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் கே. ஆர். மாரி செட்டி, கல்கத்தா; வி. எஸ். வெங்கடகிருஷ்ணய்யர், ஏ. கே. வி. மங்கலம், பரமக்குடி; வை. அ. வேலப்பிரகாசன், பார்க் டவுன், சென்னை; கே. ராமையா, கள்ளிடைக்குறிச்சி; ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியார், பம்பாய்: ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் கே. சுந்தரம், ஊழியமன்பட்டி; எம். ஸ்ரீனிவாசராகவன், மேலையூர், மாயவரம்: மதுராபுரா ஹைஸ்கூல், இரண்டாம் பாரம் மாணவர்களும், உபாத்தியாயரும். ஈரோடு: திருவண்ணாமலை, டி. எம். எச். ஸ்கூல் மாணவர்கள் (ஸ்ரீ எஸ். சுப்பிரமணியம், தமிழ்ப் பண்டிட் மூலம்) ரூ. 2—4—0: ஸ்ரீ டி. அனந்தராமன், மூலைவூர், ராமநாதபுரம்: ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் வி. வி. திருவேங்கடத்தய்யங்கார், நாங்குநேரி; எஸ். ஏ. எஸ். பத்மநாப பிள்ளை, தூத்துக்குடி: எஸ். வெங்கடேசன், வேலூர்: ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் டி. பி. வி. சர்மா, ஆற்காடு: பத்மநாபன், வேலூர்: டி. கே. எஸ். ராஜகோபால், வேலூர்: ஸ்ரீமதி ஆர். செல்லம்மாள் அம்மாள், தஞ்சாவூர்: ஏ. சுந்தரம், காவேரியம்மாபட்டி, மதுரை.

★

பங்களூர், ஸ்ரீ வி. ஆர். கே. மூர்த்தி மூலம்:

ரூ. 10—0—0: டாக்டர் கிருஷ்ணசாமி, எம். ஏ., டி. எஸ்ஸி., எப். ஆர். ஸி.; ரூ. 5—0—0 ஸ்ரீமான்கள் பி. ராமசாமி ஐயர் எம். ஏ., எச். ராமச்சந்திரன், எஸ். ராமசேஷன், டி. லக்ஷ்மி நாராயணன், பி. சேஷாத்திரி, ஆர். பார்த்தசாரதி. கே. நஞ்சுண்டையர்: ரூ. 3—0—0: ஸ்ரீ வி. ராம சுப்ரமண்யம்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் வி. எம். ராமச்சந்திரன், வி. எஸ். வெங்கடேசராமன், ஆர். நடராஜன், என். ஆர். ஸ்ரீனிவாசன், வி. ஜகன்னாதன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் என். குஞ்சிதபாதம், எஸ். ஸ்ரீநிவாச அய்யர், கோபால ராமகிருஷ்ணன், எம். எஸ். நாகராஜன், டி. ஆர். பாலகிருஷ்ணன், வி. டி. ஸ்ரீநிவாசன், என். பி. பத்மநாபய்யர், பி. வி. பாலகிருஷ்ணன், ஆர். நடராஜன், டி. ஆர். விஸ்வநாதன், எஸ். கிருஷ்ணமூர்த்தி.

ஆக ரூ. 60—0—0

மன்னார்குடி, தேசிய ஹைஸ்கூல், ஹெட்மாஸ்டர் எஸ். வைத்தியநாத அய்யர் மூலம்:

ரூ. 39—0—0: ஆறாவது பாரம்; ரூ. 21-0-0 ஐந்தாவது பாரம்; ரூ. 27—0—0: நான்காவது பாரம்; ரூ. 19—0—0: முதல் மூன்று பாரம்; ரூ. 15—0—0: உத்தியோகஸ்தர்கள்.

ஆக ரூ. 121—0—0

மானாமதுரை, கல்வி ஏஜன்டு, ஸ்ரீ உ. முத்து வீரப்பன் மூலம்:

ரூ. 7—0—0: ஸ்ரீ எஸ் சேஷாத்திரி ஐயங்கார்; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் பி. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், எஸ். டி. வெங்கடாத்திரி ஐயங்கார், ஏ. கே. சங்கர ஐயர், க. து. துரைசாமி செட்டியார், எம். கோவிந்தராஜன்; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் கே. ஸ்ரீனிவாசய்யங்கார், ஆறு. பொன்னுசாமி பிள்ளை; ரூ. 2-0-0: ஸ்ரீமான்கள் செ. ஆதிமூர்த்தி பிள்ளை, க. நடராஜ மருதமுத்து பிள்ளை, பூ. சேதுபாண்டிசாமி பிள்ளை, கே. பொன்னுசாமி அம்பலம், ச. சண்முகம் பிள்ளை, உ. முத்துவீரப்பன், ஏ. சீனிவாசன், வி. ராமலிங்கம் பிள்ளை, எஸ். வெங்கடாசலம் பிள்ளை, எஸ். ரத்தினம் பிள்ளை, எம். சேது பிள்ளை; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் பி. கே. ரங்கநாதய்யங்கார், ஆர். ராமையபாலய்யர், எம். ஆர். நாராயண ஐயங்கார். கிருஷ்ணசாமி ஐயங்கார், என். ராமசாமி ஐயர், பி. எஸ். சுந்தரமய்யர், கே. எஸ். வெங்கட்ராமன், ஆர். நரசிம்ம ராவ், ச. கொண்டையராஜு செட்டியார், ச. பரிபூரணம் செட்டியார், மு. சின்னையா பிள்ளை, எஸ். கே. கன்னுச்சாமி பிள்ளை, ஆர். துரைசாமி பிள்ளை, எஸ். எஸ். முகமது, பி. கே. மாசாணமாணிக்கராஜ், ஏ. ஸ்ரீரங்கன், கே. ஆர். எஸ். மணி, எஸ். நாராயணசாமி.

ஆக ரூ. 78—0—0

கடலூர், கல்வி ஏஜன்டு, ஸ்ரீ எஸ். ராஜகோபாலன் மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீ வி. சீதாராமய்யர்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் என். எஸ். வைத்தியநாதன், என். சுவாமிநாதன், என். சுப்பையா, எஸ். கிருஷ்ணமூர்த்தி, கே. சுப்பிரமணியம், எம். பி. ராமமூர்த்தி.

ஆக ரூ. 8—0—0

கோயம்பை, சப்-போஸ்ட்மாஸ்டர், ஸ்ரீ க. சண்முகசுந்தரம் பிள்ளை மூலம்:

ரூ. 25—0—0: ஸ்ரீ எஸ். பெருமாள் ஆப்தர்; ரூ. 20—0—0: ஸ்ரீ எஸ். எஸ். கே. பொன்னையா கவுண்டர்; ரூ. 10—0—0: திருவரங்கூர் ஏழை விவசாயிகள் சங்கம்; ரூ. 6—0—0: ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி ஸ்கூல் உபாத்தியாயர்கள்; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் கருளியாண்டி செட்டியார்—கே. பொன்னப்பன் செட்டியார், கு. அன்னாமலைப் பிள்ளை, வி. சொக்கலிங்கம் பிள்ளை, வி. கிருஷ்ணமூர்த்தி அய்யர், கே. பி. பி. கவுண்டர், எஸ். ரத்தினம் பிள்ளை, முத்துசுப்பிரமணியன், எஸ். சிவசிதம்பர நீலநாராயண பிள்ளை, எஸ். வி. வீரப்ப நாயகர்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் பா. வா. பாப்பு செட்டியார், கே. எஸ். பெருமாள், வெங்கிட கிருஷ்ணய்யர், அ. தண்டபாணி மூர்த்தி பிள்ளை, டாக்டர் ஆர். ஆர். வி. நாதன், கே. பி. கே. எம். காந்திமதிநாதன்; ரூ. 1—1—0: ஸ்ரீ மாமுண்டி நல்லையன்; ரூ. 1—0—0: ஸ்ரீ ஏ. என். மாணிக்கம் பிள்ளை.

ஆக ரூ. 120—1—0

மயிலைப்பூர், ஸ்ரீ வி. எஸ். சுந்தரராஜன் மூலம்:

ரூ. 3—0—0: ஸ்ரீ வி. எஸ். சுந்தரராஜன்; ரூ. 2—0—0: ஸ்ரீ என். ரங்கநாத ராவ்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எஸ். கே. ராஜேந்திரன், எஸ். ஆர். ராமமூர்த்தி, கே. எஸ். சந்திரசேகரய்யர், ராமப்ரம்மம், எஸ். விட்டல்

ராவ், வி. எஸ். ராமஸ்வாமி, பி. சௌந்தர ராஜன். ஆக ரூ. 12—0—0

புளு. ஸ்ரீ ஏ. எஸ். ரங்கராஜன் மூலம்:
ரூ. 4—0—0: ஸ்ரீ எம். டி. ராமச்சந்திரன்: ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ஏ.எஸ். ரங்கராஜன், வி. கே. சுப்ரமணியன், டி. ஆர். பி. ஹரன்: ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஜி. என். வெங்கடராமன், டி. ராஜாமணி, டி. சுப்பராயலு, பி. நாராயணசாமி, பி. கே. வெங்கிடகிருஷ்ணன், கே. ராமச்சந்திரன், டி. எம். ராஜு, கே. எஸ். ராஜாராவ், லாக்கஸ், எம். ஆர். சுப்பிரமணியன், டி. ஏ. பீட்டர், எம். ஆர். சேஷ அய்யர்.

ஆக ரூ. 22—0—0

மதுரை, ஸ்ரீ எ. ஏ. எஸ். எஸ். என். சோமசுந்தரம் செட்டி மூலம்:
ரூ. 10—0—0: எ. ஏ. எஸ். எஸ். என். சோமசுந்தரம் செட்டி அன்டு கோ; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் என். எம். அருணாசலம் செட்டியார் & பிரதர்ஸ், கே. நாராயணன் செட்டியார், டி. பி. பத்மனாபன், வி. சுப்பிரமணியன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ப. அ. சௌந்தரராஜன், அ. மி. சோமசுந்தரம் செட்டியார், எம். ராமசாமி, எ. ராம. கிருஷ்ணாஞ் செட்டியார், நா. சோமசுந்தரஞ் செட்டியார், ஏ. எம். சிதம்பரம் செட்டியார் அன்டு சன்ஸ், எஸ். சுந்தரராஜலு ஆச்சாரியார், வி. சுந்தரம், ஆர். எஸ். ராஜாராம் அன்டு கோ, எம். ஆர். எம். எம். பிச்சை செட்டியார், டி. எம். கே. நாண்டவன் செட்டியார் அன் சன்ஸ், டி. வி. ஆர். ராமச்சந்திரன் செட்டி அன்டு கோ., ப. ஜீவரத்தினம் ஆச்சாரி, எம். டி. சுந்தரமாச்சாரி, சோ. நடராஜன், பொ. ஷண்முகசுந்தரம், எம். மீராலெப்பை; ரூ. 5—4—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள்.

ஆக ரூ. 40—4—0

தம்பிக்கோட்டை, ஸ்ரீ என். ராமலிங்கத் தேவர் மூலம்:
ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் என். ராமலிங்கத் தேவர், டி. வி. சுப்பிரமணியன், ஜி. பாலேஸ்ரீ ராவ்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் கே. எம். எஸ். தியாகராஜன், எம். கணபதி அய்யர், எஸ். சாம்பமூர்த்தி அன்டு பிரதர்ஸ், கே. பி. ராஜாராம அய்யர். ஆக ரூ. 10—0—0

ஆழ்வார் திருநகரி, இளைஞர் சங்கம் காரியதரிசி, ஸ்ரீ தெ. நடராஜன் மூலம்:
ரூ. 3—0—0: ஸ்ரீ வி. பி. ஆத்தானய்யங்கார்; ரூ. 2—0—0: வி. அழகப்பய்யங்கார்; ரூ. 1—2—0: ஸ்ரீ எம். எஸ். சங்கர்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஆண்டபெருமாள் பிள்ளை, என். ஆள்வான், ஆர். கிருஷ்ணன், டி. ஆர். வெங்கடாச்சாரி, எஸ். திருவடி, டி. வி. டி. வைத்தியநாதன்; ரூ. 3—4—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள். (தபால் செலவு நீங்கலாக.) ஆக ரூ. 15—2—0

கூனூர், ஸ்ரீ ஆர். நாராயணன் மூலம்:
ரூ. 5—0—0: ஸ்ரீ என். வி. ராமச்சந்திர அய்யர்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஆர். நாராயணன், பி. கே. சுப்ரமணியன், ஆர். ஜெயராமன், என். சங்கர நாராயணன், எ. எஸ். ஸ்ரீநிவாசராவ், கே. வி. கிருஷ்ண பிள்ளை, டி. என். விட்டல்ராவ், என். ஸ்ரீநிவாஸன்; ரூ. 1—0—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள். ஆக ரூ. 14—0—0

ஆவடியூர், ஸ்ரீ ஆர். செல்லப்பா மூலம்:
ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஆர். செல்லப்பா, சுப்பையா, பரமசிவன், செல்லையா, பிச்சையா. ஆக ரூ. 5—0—0

சித்தனந்தூர், ஸ்ரீ சி. எஸ். தஞ்சையா மூலம்:
ரூ. 5—0—0: ஸ்ரீ சி. எஸ். தஞ்சையா, ஸ்ரீமதி எஸ். மீனாக்ஷி அம்மாள்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் த. சுப்பராயன், த. சபாபதி.

ஆக ரூ. 12—0—0

மல்லைசமுத்திரம், மஹாத்மா காந்தி தேசிய வாலிபர் சங்கம் காரியதரிசி, ஸ்ரீ எம். ஏ. வெங்கடாசலம் பிள்ளை மூலம்:
ரூ. 2—0—0: ஸ்ரீ எம். எஸ். குஞ்சு வெள்ளாஞ் செட்டியார் மூலம்; ரூ. 1—0—0: கா. தோ. மு. அங்கமுத்து முதலியார், எஸ். ராமசாமி செட்டியார், ஆண்டியப்ப முதலியார், சின்னுச்சாமி முதலியார்; ரூ. 2—0—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள்.

ஆக ரூ. 10—0—0

ஜயமங்கல, தேரு இளைஞர் காங்கிரஸ் தலைவர் மூலம்:
ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் பி. கே. ஆண்டியப்ப செட்டியார், எம். பரமசிவம் பிள்ளை, ஆர். நாராயணசாமி பிள்ளை, கிருஷ்ணராவ், எம். ஜி. பொன்னையா பாரதி, பி. மருதநாயகம் பிள்ளை, எம். ஏ. மாணிக்கம் பிள்ளை.

ஆக ரூ. 7—0—0

பிளமேடு, ஸ்ரீ ஜி. ஆர். கிருஷ்ணன் மூலம்:
ரூ. 10—0—0: ஸ்ரீ என். வெங்கடபதி; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் ஜி. ஆர். கிருஷ்ணன், ஐ. வி. ராஜகோபால்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் பி. வி. ராமகிருஷ்ணன், ஏ. என். ஜகன்னாதன்; ரூ. 1—8—0: கே. ராமஸ்வாமி; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எஸ். சுந்தரம், வி.வி. ஜனார்த்தனம், வி. பி. அனகசாமி, எஸ். கோவிந்தராஜ், ஆர். சர்மா நாயுடு, பி. வி. ராமகிருஷ்ணன், சின்னப்ப நாயுடு, வி. செங்கல்வாமி, கே. அவனாசி கவுடர், ஆர். நாராயணசாமி, வி. ஸ்ரீனிவாஸன், அய்யாசாமி செட்டியார், கே. கோவிந்தராஜன்; ரூ. 0—8—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை. (தபால் செலவு நீங்கலாக.)

ஆக ரூ. 38—8—0

திருச்சூர், கூரக்கம், ஸ்ரீ என்.வி. துரைசாமி மூலம்:
ரூ. 3—0—0: டாக்டர் ஸ்ரீ ஏ. எஸ். லக்ஷ்மணய்யர்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் என். சங்கர நாராயணய்யர், பி. கிருஷ்ணய்யர், ஜி. சுப்பிரமணிய வாத்தியார், என். நாராயண அய்யர், என். வி. துரைசாமி; ரூ. 4—8—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள்.

ஆக ரூ. 12—8—0

விழுப்புரம், கல்வி ஏஜன்டு, டி. சுப்ரமண்ய மூலம்:
ரூ. 5—0—0: ஸ்ரீ கோபால் செட்டியார்; ரூ. 3—0—0: ஸ்ரீ ஜனார்த்தனம் செட்டியார்; ரூ. 2—0—0: ஸ்ரீ சுப்பராமன் செட்டியார்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் மாசிசாமி செட்டியார், சிவானந்தம். ஆக ரூ. 12—0—0

புதுச்சேரி, ஸ்ரீ ஜி. கணபதி மூலம்:
ரூ. 2—0—0: ஸ்ரீ முனிசாமி; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் முத்துக்குமாரசாமி, கணபதி, மாணவி மதுரேசன்கோனு; ரூ. 5—0—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடைகள்.

ஆக ரூ. 10—0—0

கன்னமங்கலம், ஸ்ரீ பிச்சண்ண செட்டியார் மூலம்:
ரூ. 4—0—0: ஸ்ரீ பிச்சண்ண செட்டியார்; ரூ. 3—0—0: ஸ்ரீ குளத்தூர் நடேசய்யர்; ரூ. 2—0—0: ஸ்ரீ ராமஞாத செட்டியார்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் குப்புசாமி செட்டியார், டாக்டர் எஸ். ராமச்சந்திரன், கே. ஜி. ஸ்ரீராமுலு, வி. டி. ராஜகோபால், டி. ஆர். மோகம்பரீ முதலியார், ராமச்சந்திர குப்தா;

ரூ. 0—8—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை. (தபால் செலவு நீங்கலாக)

ஆக ரூ. 15 2 6

செங்கமல நாச்சியார்புரம். ஸ்ரீ எஸ். ஜி. ஸ்ரீனிவாச நாயுடு மூலம்:

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எஸ். சுந்தரராஜுலு நாயுடு. ஏ. ரெங்கசாமி நாயுடு. ஆர். ரெங்கசாமி நாயுடு. எம். ரெங்கராமானுஜ நாயுடு. எஸ். வெங்கடசாமி, ஆர். அய்யாச்சாமி, ஏ. திரு நாராயணசாமி, எஸ். எதிராஜுலு, ஜி. முனியாண்டி, எஸ். ஜி. ஸ்ரீநிவாசன்.

ஆக ரூ. 10—0—0

வைத்தியூர். ஸ்ரீ வி. எஸ். மேனன் மூலம்:

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஆ. நடராஜன், ரு.ப. அருணாசலம், நீ. பழ. நீ., அ. கார்மேகம், நீ. சுப. சுப. சுப்பிரமணியன் செட்டியார், மு. வீரமலையான் செட்டியார், கரு. க. கரு., பழ. ச., செ. செ.; ரூ. 1-0-0 சில்லறை வசூல்.

ஆக ரூ 10—0—0

தென்காசி, ஸ்ரீ பி. வி. பாலகிருஷ்ணம ராஜா மூலம்:

